# செங்களம்

தை
1986

விலை 3-25



பாட்டுக்களை
வேட்டுக்களாகத்
தீருங்கள்
எழுதுகோல்
துப்பாக்கியாகட்டும்
இனம்காணும்
விடுதலையை
இலக்கியமும்
காணட்டும்

யாழ் கலாச்சாரக் குழு வெளியீடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மினி'சினிமா அரங்குகள்...

## மற்றோர்வகை கலாச்சார சீரழிவு நிலையங்கள்

ஈழத் தமிழ் தேசிய இனம் இன்று பல்வேறு விதமான நெருக்கடிகளையும் பிரச்சனைகளையும் உள்ளடக்கிய இன்னல்களை எதிர்நோக்கி வதைபட்டு வருகின்றது.

அரசியல், ஆயுதமேந்திய விடுதலை வேட்கைமிக்க போராட்ட வடிவம் தேசிய, சர்வதேசிய மட்டத்தில் ஒரு நெருக்கடி மிக்க காலகட்டத்தை நோக்கி மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதன் விளைவுகளை இன்று தமிழ் தேசிய இனத்தின் அன்றாட வாழ்க்கையே ஸ்தம்பித்துப் போகுமளவிற்கு போராட்ட நடவடிக்கைகள், விடுதலை இயக்கங்கள் சிலவற்றின் மனிதாபிமானமும் தீர்க்கதரிசனமுமற்ற அடாவடித்தனங்கள், அரசாங்கம் திட்டமிட்டு 'பயங்கரவாத ஒழிப்பு' நடவடிக்கை என்ற பெயரால் பரவலாகத் தமிழ்ப் பிரதேசங்களில் நிகழ்த்தி வரும் அரக்கத்தனமான உயிர்க் கொலைகள், பொருளாதாரச் சீரழிப்புத் திட்டங்கள் போன்ற செயற்பாடுகள் அதல பாதாளத்துள் தள்ளி வருகின்றன.

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது' போல அரசியல், பொருளாதார, சமூக சீரழிவுகளால் அவஸ்தைப்பட்ட நம்மினத்தை இப்போது நம் தேசிய இனத்தின் அடிநாதமான 'கலாச்சாரத்தை' சீரழிக்கும் சக்திகளால் நமது அடிப்படைப் பண்புகளையே இழந்து வாழும் அளவிற்கு நிர்க்கதியான சூழலுக்கு தள்ளிச் செல்லப்படுவதை நம்மவர்கள் புரியாதிருப்பது வருந்தத்தக்கதாக உள்ளது.

நம்மினத்தின் இளைய தலைமுறையினரின் கல்வியில் வைக்கப்பட்ட 'கொள்ளியின்' ஜுவாலை இன்னமும் தணிந்தபாடில்லை; தமிழ் இளைஞரின் எதிர்காலம் கேள்விக்குறியாகி நம்முன்னால் விஸ்வரூபமெடுத்து நிற்கிறது.

நமது பாரம்பரியக் 'கலை'களோ சிங்களத் தேசிய அரசின் திட்டமிட்ட 'சதி'களாலும், நம்மவர்களின் அக்கறை, ஆர்வமின்மைகளாலும் அந்நிய கலாச்சார மோகம் விதேசிய கலாச்சார ஊடுருவல்கள், இன உணர்வின்மை போன்ற பல காரணிகளாலும் நசிவடைந்து நலிவடைந்து வருவது கடந்த பல வருடங்களாக நாம் தெளிவாகப் புரிந்து கொண்ட விடயமாகும்.

இந்நாட்டின் முற்போக்கு சிந்தனை கொண்ட இலக்கியவாதிகளின் இடைவிடாத போராட்டங்களும், முயற்சிகளும், இன்று இலக்கியத்துறையில் தமிழகத்திற்கே வழிகாட்டும் அளவிற்கு ஓர் ஆரோக்கியமான வளர்ச்சி நிலையை அடைந்திருப்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

இன்று நமது தமிழர்களின் (தமிழகத்தில்) வாழ்வும் அரசியலும் தென்னிந்திய சினிமா எனும் மாயையுள் சிக்குப்பட்டு சீரழிவதை நாம் கண்கூடாக அறிந்ததொன்றாகும். 'இருபதாம் நூற்றாண்டின் கலாச்சாரச் சீரழிவு' என்று தமிழ்ப் படங்கள் குறித்து பிரபல சிங்கள திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் கருத்துச் சொல்லும் அளவிற்கு நமது அசையும் பட உலகம் தமது கலாச்சாரத்தை சீரழிக்கும் வெறும் 'வியாபார' மசாலாவாக இருந்து வருவதும் நாம் மறுக்க முடியாத உண்மையாகும்.

தமிழீழத்தில் இன்று 'திரையரங்குகள்' சற்று ஓய்வுபெற்ற நிலையை சாதகமாகக் கொண்டு இன்று மூலைமுடுக்கு, சந்துபொந்தெல்லாம் தலைதூக்கி தினமும் தோன்றி வரும் 'மினிசினிமா' என்ற வீடியோ திரைப்பட அரங்குகள் குறித்து நாம் எச்சரிக்கையுடன் அவதானிக்க வேண்டிய சில விஷயங்களை நாம் இங்கு குறிப்பிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தென்னிந்திய சினிமாவின் மூன்றாந்தரத் தரங்கெட்ட சினிமாக்களின் வீடியோ படச் சுருள்களின் அபரிமிதமான படையெடுப்பும் அதற்கு இந்த மினிசினிமாக்கள் கொடுக்கும் கொச்சைத்தனமான வார்த்தைகளைக் கொண்ட கவர்ச்சி விளம்பரங்களும் வெறும்

(தொடர்ச்சி பின் அட்டை உட்புறம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்காளம் 1

யாழ் கலாச்சாரக் குழுவினரின் மாசிகை

தை / ஜனவரி / 1986




## கருத்துக்கணை

எக்காளம்.

வெற்றியைக் குறிப்பது.

சுப்பீட்த்தை - அறைகூவலை - பிரகடனத்தைக் குறிப்பது.

எல்லாவற்றிலும் மேலாக ஒற்றுமை உணர்வுடன் ஒருமித்து இதயசுத்தியுடன் ஒலிக்கும் 'சங்கநாதம்' போன்ற திடசங்கற்ப ஓசையைக் குறிப்பது,

தமிழ் தேசிய இனம் தனது உரிமைகளையும், இறைமையையும் மீட்டெடுக்கும் பாரிய தர்மயுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இன்றைய நெருக்கடி மிக்க காலகட்டத்தில் 'எக்காளம்' தனது ''பேரொலி'யை எந்த நோக்கில் பிரகடனப்படுத்த போகிறது என்பது அதன் தோற்றத்தின் சுப்பிரகடனத்திலேயே தெளிவாகவே புரியவைக்கக்கூடியது.

''சாற்றும் கவி-கலைகள் யாவும் சமுதாய ஏற்றத்தை முன்னெடுக்கும் ஏவுகணைகளாகட்டும்''

—என்று முன்னர் ஓர் அணுயுக தமிழ்க் கவிஞன் கூறிய பாடல் வரிகளை நமது படைப்பாளிகள் தாரக மந்திரமாகக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் காலகட்டமிது.

கொலைவாளினை எடடா-மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே-உயர்
குணமேவிய தமிழா-'

என்ற பாட்சிக் கவிஞர் பாரதிதாசனின் அறைகூவல் வரிகளின் ஆழத்தையும், அர்த்தபுஷ்டியையும், தீர்க்க தர்சனத்தையும் சிந்தித்து செயற்படவேண்டிய காலகட்டமிது.

ஆகவே இசைவுணர்ந்து செயற்பட மறுக்கும், அல்லது பின்வாங்கும், தவறும் கலைஞர்கள், சிருஷ்டியாளர்கள் அனைவரும் காலத்தால், வரலாற்றால், நிராகரிக்கப்பட்டு மறக்கப்பட்டவர்கள் ஆவார்கள் - உலகின் அடக்குமுறைக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்ட வரலாறுகள் கற்றுத்தரும் பாடமிது.

ஒரு இனத்தின் 'விடுதலை' என்பது வெறுமே அரசியற் சுதந்திரத்தை மட்டும் குறிப்பதல்ல மாறாக அந்த இனத்தின் கலை, இலக்கிய, கலாச்சார தனித்துவ வளர்ச்சியின் பங்களிப்போடு இணைந்த மகோன்னதமான எதிர்கால சுபீட்சமிக்க வாழ்வின் நம்பிக்கையின் அர்த்தத்தையும் குறிப்பதுமாகும்.

நமது வரலாற்றில் அடுத்து வரவுள்ள 'பொற்கால' அத்தியாயங்களுக்காக இப்போது இரத்தத்தால் ஓர் நீண்ட முன்னுரை எழுதவேண்டியுள்ளது.

''பொங்குதமிழர்க்கு இன்னல் விளைந்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு''

என்ற நமது முன்னோடிக் கவிஞர் பாரதிதாசனின் வார்த்தையை மெய்ப்பிக்க வேண்டிய கடைப்பாடு எமது கலைஞர்கட்கு-சிருஷ்டியாளருக்கு நிறைய உண்டு.

வருங்கால வரலாற்றில் அதனை மெய்ப்பிக்க நமது வலிய கரங்களை, அதனிலும் வலிய சிந்தனையை எல்லாவற்றிலும் மேலான போராட்ட உணர்வுடன் இறுக பிணைத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட 'எக்காளத்துடன்' இணைந்து கொளவோம்.

• • •

நமது தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் மிகவு கூர்மையடைந்து வரும் இன்று நம்மண்ணிலும், அயல் நாடுகளிலும் நடந்து வரும் நிகழ்ச்சிகளை கூர்மையுடன் அவதானிக்க வேண்டியது மிக அவசியமானது. நமது போராட்ட நடவடிக்கைகளை பின்தள்ளவும், விடுதலை ஸ்தாபனங்கள் மீது அவதூறு கற்பிக்கவும் பிற்போக்குச் சக்திகளும் எதிர்ப் புரட்சிகரச் சக்திகளும் அரசாங்கத்தின் கைக்கூலிகளும் திட்டமிட்டு செயலாற்றி வரும் சமயம் இதுவாகும்.

சமீபத்தில் நடந்த சில நிகழ்வுகளை நாம் இங்கு குறிப்பிடுதல் அவசியமாகிறது.

• மக்களோடு ஐக்கியப்பட்டு மக்களுக்காகப் போராட வேண்டிய சில விடுதலை இயக்கங்கள், கொள்ளைகள், வாகனம் கடத்தல், தனிநபர் கடத்தல், ஆலயத் திருட்டு போன்ற அடாவடித்தனங்களில் அத்துமீறி ஈடுபட்டு வருதல் மூலம் மக்களின் அமைதியை கெடுக்கும், இயக்கங்கள் மீது மக்கள் அவநம்பிக்கைகொள்வதற்கும்மட்டுமல்ல எதிர்ப் புரட்சிகர சக்திகளுக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வருவது வருந்தத்தக்கதாக உள்ளது.

இவைகள் எல்லாம் விடுதலைப் போராட்டத்தை பின்தள்ள 'நாமே காரணமாகும்' நடவடிக்கைகள் ஆகும்.

இவற்றையெல்லாம் மீறி மக்களை விடுதலை ஸ்தாபனங்கள் மீது சந்தேகப்படவைப்பது இயக்க முரண்பாடுகளும் மோதல்களும் ஆகும். எதிரியின் வேலையைச் சுலபமாக்குவது இத்தகைய நடவடிக்கைகளே. இது குறித்த விளக்கங்கள் எதுவானாலும் மக்களுக்கு அவை அர்த்தமற்றவையே...

இனி எதிரியின் நடவடிக்கைகள் குறித்து சில விபரங்கள்.

• கடந்த மாதத்தில் சீனப் போர்க்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்றன. அதுமட்டுமல்ல அமெரிக்க விமானந்தாங்கி கப்பல்கள் 4 இங்கு வந்து நின்றன. அதிஉத்தமரின் தார்மீகச் சிந்தனையையும், சமாதான உணர்வையும் இவற்றின் வருகையுடன் ஒப்பு நோக்கி பார்ப்பதில் ஆசியப் பிராந்தியத்தில் அமைதியைப் பேணும் நாடுகளும் எம்முடன் இணைந்து சிந்தித்தல் நல்லது.

• பஹாமாஸ் மகாநாட்டின் பின்னர் அதிஉத்தமர் இஸ்ரேலிய பிரதமர் ஷியோன்யை பாரீசில் சந்தித்துப் பேசியதும், டாககா பேச்சுவார்த்தையின் பின்னர் பாகிஸ்தான் ஜியாவின் ஸ்ரீலங்கா விஜயத்தையும் கூட சாதாரணமாக நினைக்க முடியுமா?

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்ற பழமொழியை நினைவு கூர்தல் நலம்.

• கடந்த 20, 21, 22 திகதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அரியாலை, ஊரிக்காடு, தொண்டமானாறு சுதுமலை ஆகிய இடங்களில் அப்பாவி மக்கள் மீதும் வீடுகள் மீதும், ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கியால் சுட்டும் கைக்குண்டுகள் வீசியும் தாக்குதல் நடத்தினர்கள்.

• தமிழ்ப் போராளிகளுக்கெதிரான யுத்தத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் (சமாதானம் பேசவா?) ஸ்ரீலங்கா அரசு தென்ஆபிரிக்கா, பிரிட்டன், அமெரிக்கா, சீனு போன்ற நாடுகளிடமிருந்து, துப்பாக்கிவகைகள், கனரக கவச வாகனங்கள் ஹெலிகொப்டர்கள் போன்றவற்றை பெருமளவு கொள்வனவு செய்துள்ளது

• இவற்றிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது ஒன்றே ஒன்றுதான், நாம் தூங்குவதற்கான தருணம் இதுவல்ல ஏனெனில் எதிரி பாரியதிட்டங்களுடன் விழித்துக் கொண்டே இருக்கிறான் •


## தேசிய இனப்பிரச்சனை என்பது..

“தேசிய இனப்பிரச்சனை என்பது புரட்சியின் வளர்ச்சி என்ற பொது பிரச்சனையின் ஒரு பகுதியேயாகும். சரித்திர பூர்வமாக வளர்ந்துள்ள ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும் ஏற்பட்டுள்ள புரட்சியின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு புரட்சியின் வெவ்வேறு கட்டங்களில் தேசிய இனப்பிரச்சனைக்கு வெவ்வேறு லட்சியங்கள் இருக்கும் அதற்கேற்றாற் போன்று அமைப்புக்களின் தேசிய இனப்பிரச்சனை பற்றிய கொள்கைகளும மாறும்.

— லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தமிழ்ப்போராளியின் சிறைக்கவிதை



காலைச் சூரியனின் செங்கம்பள வரவேற்பாக
காலைத் தாக்கும் இறப்பர் குழாய்களின் முள்முடிகள்...
இருட்டுத் தேவதையின் பூட்டிய அறைக்குள்
சேற்றில் வழியும் அழுக்குப் பூக்களினை பறித்து
ஓரிரு நாளென்று எழுதிக் சோர்க்கும் ஜாலங்கள்
நிலவும் சூரியனும்வேகச் சுழற்சியில் தினமும் தலைக்குள்
வர்ணக் குடைகள் பிடிக்கும் வீடியோ நாடாக்களாக
தகரங்களை கீணற்று நீரிலும்
என்னிலும் புழுக்களை வளர்க்க
இருட்டுத் தேவதையின் பூட்டிய அறைக்குள்
கட்டெறும்புகளும் பாம்புகளும்
எனக்கு படுக்கைகளை அமைக்க
எனது ஜனனம இங்கு மரணமாவதை உணர்கிறேன்.

## நிரந்தர சாட்சிகள்

தற்கால அறிவு ஜீவியின் சொற்களும், எண்ணங்களும் பெரும்பாலும் கவிதையாகவே நின்று விடுகின்றன அலங்காரமாக மட்டுமே நின்று விடுகின்றன, அவனது செயல்களுடனும் அவனது நிஜமான வாழ்க்கையுடனும் அவற்றுக்கு ஒரு தொடர்பும் இல்லை.


தற்கால அறிவு ஜீவிக்குள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இரண்டு உலகங்கள் இருக்கின்றன அவனுடைய எண்ணங்களின் உலகமும் செயல்களின் உலகமும் மிக நுட்பமான கருத்து முதல்வாதமும் கொச்சையான பொருள் முதல்வாதமும். அவன் தன் சொந்த வாழ்க்கையில் கருத்து முதல் வாதியாயிருக்கிறான். வெளியிலோ பொருள் முதல் வாதம் பேசுகிறான்.

தற்கால அறிவு ஜீவி தன்னைச் சூழ்ந்துள்ள எதார்த்த வாழ்க்கையையோ, தன் சொந்த வாழ்க்கையையோ காண்பதில்லை. ஏன் பார்ப்பதில்லை என்றால் பார்க்க விரும்புவதில்லை நாடக, இலக்கிய மேடைகளிலோ கண்ணீர் நடைமுறையிலோ அதற்கு எதிர்மாறான செயல்கள் அகையால் தான் நமது சமூகத்தை உதாரணமாகக் கொண்டு வளரும் குழந்தைகள் இடையே இத்தகைய போலித் தனத்தையும் பசப்புத் தனத்தையும் ஊடுருவ விடக்கூடாது.

இப்படிப்பட்ட பொய்மையயும் பசப்பையும் வெறுக்க குழந்தைகளைப் பயிற்றுவிப்பது அவசியம். இப்படி வளரும் குழந்தைகளைப் பயிற்றுவிப்பது அவசியம் இப்படி வளரும் குழந்தைகள் அறிவு ஜீவிகளின் முகத்தில் காறித் துப்பும் நிரந்தர சாட்சிகளாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ முகப்போவியத்திற்கான கவிதை



# யுகயாத்திரை

இந்தப்பாலையில் எங்கள் தாகத்தை
அந்த-
சோலைகளை எட்டுவதால் மட்டுமே
தீர்க்கமுடியும்
அதுவரை உறுதுணை
நம்பிக்கை ஒட்டகங்களும்
பாழடைந்த-
காலடிச் சுவடுகளுமே...
எங்களின் முன்னே
தீர்க்கமான பாதச்சுவடுகள்
அவை-
எம்மை வழிகாட்டி முன்செல்லும்
தீர்க்கதரிசனங்கள்
தரிசனங்களை தரிசிக்க
தகர்த்திடுவோம் தடைகளை
பாழ்வெளியில்
பாழும் சுவடுகளினூடே
ஒட்டகங்கள்
தடம் தெரிந்து நடக்கின்றன.
எங்கள் சுவடுகள்
முரண்களை எதிர்க்கும்
முரண்பாடுகளாய் விரைகின்றன
சேற்றில் புதையா
எங்கள் பயணங்கள்
தொடரும். தொடரும்...
இறுதிவரை.
எங்கள் தாகம்
அந்தச் சோலையில்
தீருங்காலம் நெருங்கும்வரை...

## கவிஞர் திணறினார்! —

சோவியத் நாட்டில் புரட்சி நடந்து கொண்டிருந்த சமயம் புரட்சிக் கவிஞன் மாயா காவ்ஸ்கி ஒரு கூட்டத்தில் மிகவும் உணர்ச்சிகரமாக பேசிக் கொண்டிருந்தான்.

''தோழர் லெனின் அவர்களது தலைமையும், செம்படையின் தீரமும் ''

கவிஞன் தான் சொல்ல வந்ததை சொல்லி முடிக்கவில்லை அதற்குள் கூட்டத்தில் இருந்த இளைஞர் ஒருவர் உற்சாகம் மேலிட குறுக்கிட்டு கூறினார்.

''**மாயா காவ்ஸ்கியின் கவிதைவரிகளும்**'

இதைக் கேட்ட கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். கவிஞரோ திணறிப் போனார்

---

△ கலாச்சாரம் இல்லாமல் சோஷலிஸ சமுதாயம் வாழமுடியாது. ஒரு தேசிய இனம் தனது விடுதலைக்காக போராடுகிறது என்றால் அது தனது கலாச்சாரம் என்ற வலுவான அஸ்திவாரத்தில்நின்று அதனை வலுப்படுத்த-அதாவது அந்த இனத்தின் பாரம்பரியத்தின் உயிர்நாடியான கலாச்சாரத்தின் மேன்மையை அடைந்து போராடுவதையே குறிக்கும்.

△ தலைமை தாங்குதல் - அதுதான் சோஷலிஸ சமுதாயத்தில் எழுத்தாளன் வகிக்கும் ஸ்தானம். ஏனெனில் சோஷலிஸத்தில் கலாச்சாரத்தின் ஸ்தானமும் அதுவே. அங்கே கலாச்சாரம் வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது.

---


## எக்காளம்

உங்களிடமிருந்து ..
கருத்துக்களை —
வியர்சனங்களை — .

தமிழ் தேசிய இனத்தின் சாலசட்டத்தின் தேவைகளை நோக்கி முன்னெடுத்து செல்ல வைக்கும் —

**- கலை. இலக்கியப் படைப்புகளை**

**தோழமையுடன் எதிர்பார்க்கிறது ..**

தொடர்புகள்:

யாழ் கலாச்சாரக்குழு ...

B. A. தம்பி ஒழுங்கை. யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் அரசினர் வைத்தியசாலை

## ஒரு கண்ணோட்டம்

யாழ் அரசினர் வைத்தியசாலை ஒன்றே தற்போதைய நிலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும் பாதுகாக்கப்பட வேண்டியதாகவும் உள்ளது. விடுதலைப் போராட்டம் நடைபெறும் இவ்வேளையில் ஒரு வைத்தியசாலை பல போராளிகளினதும் மக்களினதும் உயிர் ஆபத்தைப் போக்க நவீனமயப்படுத்தப்படவேண்டியதன் அவசியம் இங்கு உணரப்பட வேண்டும். நடைமுறைக் காலத்தில் ஏற்படும் நோய்களையும் விபத்துக்களையும் தவிர போராட்ட காலத்தில் ஏற்படும் உயிர் ஆபத்துக்கள் அதிகமாய் உள்ளதால் வைத்தியர்களும் வைத்தியசாலை உபகரணங்களும் போதியளவு இருத்தல் அவசியமாகிறது. ஆனால் யாழ். அரசினர் வைத்தியசாலையின் நிலை அரசியல் காரணமாக அரசாங்கத்தாலும் வைத்தியர்களின் வெளியேற்றம் ஓர் தொடர்ச்சியாக அமைவதாலும் மற்றைய சமூக நலன்களை சிந்திக்காது இயக்கங்களின் நடவடிக்கையினாலும் மக்களின் சுகாதாரம் பற்றிய அறிவின்மையினாலும் மேலும் மேலும் குன்றி வருவது நமது சமுதாய பின்னடைவைக் காட்டுகிறது.

நோய் தொற்று விகிதம் முன்னைப் பொழுதிலும் தற்பொழுது உயர்வாக இருப்பதற்கு முழுவதுமே வைத்தியசாலை நிர்வாகத்தின் கவனமின்மையே காரணமென்று கூறமுடியாது. ஓரளவு தற்போதைய சூழ்நிலை காரணமாக சுத்திகரிப்பு வேலையாட்கள் சரியான வேலை நேரத்திற்கு வரமுடியாமையும் ஒரு காரணமாகக் கூறமுடியும். வைத்தியசாலை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் காலை 6-00 மணிக்கு சுத்திகரிப்பு வேலையாட்கள் வரமுடியாததைக் கண்டிக்க முடியாத நிலையிலும் அதனால் முழு Wardகளும் சுத்திகரிக்கப்பட முடியாத நிலையிலும் இதைத் தவிர்க்க புதிய நியமனங்கள் செய்ய வேண்டியிருந்தமையாலும் ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல் தவிர்க்க முடியாதது ஒன்றாகி விட்டது. தற்போதைய புதிய நியமனங்கள் இதனை ஈடு செய்தாலும் பெருமளவு மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. இதே வேளையில் வேலையாட்களின் பொறுப்பின்மையையும் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம், சுத்திகரிப்பாகக் கொடுக்கப்படும் இரசாயனப் பொருட்களை வெளிவியாபாரிகளுக்குக் கொண்டு சென்று விற்றல் சமூக விரோதச் செயலும் பொறுப்பற்ற செயலும் ஆகும். இதைத் தடுக்க சாம்பலோடு கலந்து கொடுத்த போதும் இது பெருமளவு வெற்றியை அளிக்கவில்லை. இவ்வாறான செயல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய ஒன்று.

வைத்தியசாலையில் நோயாளிகளின் தொகை 1100 ஆக மாத்திரமாகவுள்ளபொழுது நடைமுறையில் இது சில மடங்கால் அதிகரிக்கிறது. நோயாளிகளின் அதிக எண்ணிக்கையால் பலர் நிலத்திலும் விறாந்தையிலும், ஓடையிலும் படுத்திருப்பதைக் காணமுடிகிறது. அதிகமான சன நெரிசல் பொதுவாகவே சுகாதாரக் குறைவாகவிருந்த பொழுதிலும் வைத்தியசாலை சரியாக பராமரிக்கப்படாத நிலையில் நோய்த் தொற்று விகிதம் அதிகரிப்பதில் ஆச்சரியப்படாதநிலையில் நோய்த் தொற்று விகிதம் அதிகரிப்பதில் ஆச்சரியம் இல்லை. குறிப்பாக சத்திர சிகிச்சை Wardகளான 5, 6, 7, 25 இவற்றில் நோய் தொற்று விகிதம் மிகவும்உச்சநிலையை அடைந்துள்ளது. இதேநிலையில் விரிவாக ஆராய்ந்தால் ஒரு Wardஇல் 39 கட்டில்கள் இருந்தபொழுதும் கிட்டத்தட்ட 50 நோயாளிகள் இருக்கும் பொழுது அவர்கள் மலசலகூடத்தைப் பாவித்தால் ஒரு மலசலகூடத்திற்குச் சராசரி 12 பேர் பாவிப்பதாகக் கணக்கிடலாம். ஆனால் அங்குள்ள 4 மலசலகூடங்களில் பெரும்பாலும் 2 பாவிக்க முடியாத நிலையிலுள்ளதை அவதானிக்கக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக உள்ளது. இதைத் தவிர இவ் 50 நோயாளிகளுடன் தங்கும் உதவியாளர்களும் அதே மலசலகூடத்தைப் பாவிக்கும் பொழுது சராசரி 30க்கு மேற்பட்டோர் ஒரு நேரத்தில் ஒரு மலசலகூடத்தை பாவிக்கின்றனர் இதே நிலையில் மாநகரசபை புள்ளி விபரப்படி 70 விகிதமானோர் மாத்திரமே மலசலகூடங்களைப் பாவிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக வைத்தியசாலையில் பலதரப்பட்ட நோயாளிகள், பார்வையாளர்கள் வருவார்களாயின் ஒரிருவர் சரியான முறையில் பாவிக்காததால் மேலும் நோய்த்தொற்றுகளுக்கு வழிவகுக்கிறார்கள். பாவிக்க முடியாத மலசலகூடங்கள் துர்நாற்றம் வீசும் நிலையில் இருந்தும் கூட அது பாவிக்க முடியாதென அறிவிப்பு இருந்த பொழுதிலும் கூட சிலர் பாவிப்பது தவிர்க்க முடியாததாக உள்ளது சில மலசலகூடங்களிலிருந்து கழிவு நீர் Wardஇல் வருவதும் தவிர்க்க முடியாததும் கவனிப்பற்றதாயும் உள்ளது. மேலும் மக்களிற் சுகாதாரமற்ற செயலை பொருட்படுத்தாது இவ்வாறு இருப்பது ஓர் வழமையான செயல் போல் அதற்குப் பழகிவிட்டதும் கவலைக்குரியது. வைத்தியசாலை நிர்வாகமும், மலசலகூடம் திருத்துவதற்கான முயற்சிகள் எடுப்பது பொருளாதார ரீதியிலான நடைமுறைச் சிக்கல் உருவாவதும் பிற்போட்டுச் செல்வதும் ஒரு வகையில் நியாயமானதே!

பார்வையாளர்களும் நோயாளிகளைப் பார்க்க வரும் போது பலவித பொருட்களை வெளியிடங்களிலிருந்து வாங்கி வரும் போது அவைகள் பெறப்படும் இடங்களைப் பற்றிய அறிவின்றி கொடுக்கப்படும் விலை பற்றிய நோக்கோடு மாத்திரமே வாங்கி வருவதால் அப்பொருட்கள் நோய் தொற்று காவிகளாக இருப்பதை அறிவதில்லை. அத்தோடு அப்பொருட்களை சாப்பிட்டபின் எச்சங்களைக் கட்டிலின் கீழேயோ அல்லது மறைவாக வைத்து விடுவது மேலும் தொற்று ஏற்படுவதற்கு ஏதுவாகிறது. பலர் நோயாளியின் படுக்கையிலேயே அமர்ந்திருந்து பேசுவதை அவதானிக்க முடிகிறது. இவர்கள் தாங்கள் வெளியிடங்களிலிருந்து எடுத்து வரும் தொற்றுகளைக் கட்டிலிலும் நோயாளிகளிலும் பரவவிடுவதை அறிவதில்லை. இதே படுக்கை மெத்தைகள் 6 வருடகாலமாக மாற்றப்படாது தொடர்ந்து நோயாளிகள் பாவித்து விடும் ஒரு நிலை இருப்பதை நாம் சிந்தித்தால் இதுவரை காலத்திலும் நோய்க்காவிகளை எந்தளவிற்கு அவை கொண்டிருக்கும் என்பதை நாம் ஊகிக்க முடியும். இதே வேளையில் வைத்தியசாலைக்கென அரசாங்கம் 1 வருடம் ஒன்றிற்கு 150 மெத்தைகள் மாத்திரமே கொடுக்கிறதென்பது கவனிக்கத்தக்கதொன்று.

பார்வையாளர் நேரத்தில் வரும் பார்வையாளர் வைத்தியசாலை சூழ்நிலையை அவர்கள் தங்கியிருக்கும் ஒவ்வொரு நிமிடமும், அசுத்தமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை உணர வேண்டும். இதனை மையமாகக் கொண்டே ஒரிரு வருடங்களுக்கு முன்பு இரண்டு பார்வையாளர் மாத்திரமே ஓர் நோயாளியைப் பார்ப்பது வலியுறுத்தப்பட்டிருந்தமையையும் நாளடைவில் அது மக்களின் ஒழுங்கீனத்தால் தோல்வியடைந்ததையும் கருத்திற் கொள்ள வேண்டும். பார்வையாளரின் வசதியையும் நோயாளிகளின் உணவையும் உத்தேசித்து யாழ் வைத்தியசாலையில் மாத்திரம் காலை 6.00 7.00 மணிக்கிடையிலான ஒரு மணி நேரமும் பார்வையாளர் நேரமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் வைத்தியசாலை நிர்வாகம் இதனால் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சனையை நாம் அறிவதில்லை, காலை 7-00 மணிக்கு வரும் தாதிகள் இரவு நேர சேவை புரியும் தாதிகளிடம் இருந்து ஒவ்வொரு நோயாளியாக பொறுப்பேற்க வேண்டியது அவர்களின் கடமையாகும். ஆனால் பார்வையாளர்கள் 7-00 மணிக்குப் பின்னர் வெளியேறாமல் நிற்பதால் தாதிகள் பொறுப்பேற்பது நடைமுறையில் இல்லாததொன்றாகிவிட்டது. ஏனெனில் பார்வையாளர்களின் தாமதம் தாதிகளின் மற்றைய கடமைகளான மருந்து கொடுத்தல் படுக்கையை ஒழுங்கு செய்தல் முதலியனவும் வைத்தியரின் பார்வைக்காக அவர்களைத் தயார்படுத்தலும் போன்றவற்றிற்குத் தேவையான நேரம் கிடைக்காமல் செய்கிறது எனவே ஒவ்வொரு நோயாளியாக பொறுப்பேற்காமல் தாதிகள் நோயாளிகள் விபரப் பத்திரத்திலுள்ளபடி மருந்துகளைக் கொடுக்க ஆரம்பிப்பது நோயாளிகளின் நலனுக்கு உகந்தது அல்ல. இதே வேளையில் பார்வையாளர்கள் தமது தாமதத்தின் விளைவை அறியாது தாம் தாமதித்து நிற்பது அவர்களின் உரிமை போலவும் தாதிகளோ மற்ற உத்தியோகஸ்தரோ வெளியேறச் சொன்னால் அது அவர்களில் சுய கௌரவத்திற்கு ஏற்படும் இழுக்கு போன்று எண்ணுவதும் அவர்களின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழப் போராட்டத்திற்கான காரணிகள் I

தமிழ் இளைஞர்களை, ஈழப் போராளிகளை ப-ய-ங்-க-ர-வா-தி-க-ள் என்று உருத்து உச்சரித்து நமது குறிக்கோளுக்கும் இயக்கத்திற்கும் மாசு கற்பித்து தமிழீழ மக்களை அடக்கி ஆள ஜயவர்த்தனபுர அரசு முற்பட்டிருக்கிறது. அதேசமயம் கூலிப்படையினரை, இனவெறியர்களை, கொள்ளையடிப்பதில் கண்ணுங்கருத்துமாக இருக்கும் ஆயுதப் படையினரை ''இராணுவவீரர்'' என்று கூறுவதில் பெருமைப்படுகின்றனர். தமிழ்த் தினசரிகளும் இவர்களைச் சிப்பாய்கள் என்ற அர்த்தபுஷ்டியான உபயோகத்திலுள்ள வழமையான சொல்லால் வர்ணிக்காமல் இராணுவவீரர் என்று கூறுவது விந்தையாக இருக்கிறது.

நாம் ஏன் ஆயுதம் எடுத்தோம் என்பதை இரத்தினச்சுருக்கமாக விளக்கி எமக்கு மாசு கற்பிப்பதைத் தடுத்துநிறுத்துவது அவசியமாகின்றது. இலங்கை ஒரு குடியரசு என்ற கூரையில் நின்று கொள்ளி மினுக்குகிறார்கள். குடியரசு என்பது முடியரசு என்ற மதத்திற்கு எதிரான கருத்துடையது. குடியாட்சி முடியாட்சி என்றும் இந்த எதிர்த்தரம்பான அரசு முறைகளை அரசியல் ஆய்வில் கூறுவர். முடியாட்சி என்பது அரசு நடாத்தும் முடிமன்னனின் வாட் பலத்தால் உருவாக்கப்படுவது உருவாக்கப்பெற்ற பின்னர் மக்கள் மன்னனைப் போற்றிப் பெருமைப்பட்டு நடாத்தலாம். ஆனால் தத்துவ அடிப்படையில் முடியாட்சி மன்னனின் வாட்பலத்தில் தான் உதயமாகின்றது. இன்று முடியாட்சிமுறை அருகிவிட்டது; ஆனால் தத்துவ அடிப்படையைப் பூரணமாக்குவதற்காக இங்கு கூறினோம்.

குடியாட்சி, குடியரசு என்பது குடிமக்களின் சுதந்திரமான விருப்பின் பேரில் செய்த செய்த தீர்மானத்தில் தான் உருவாகிறது. சுதந்திரமான வகையில் தாம் ஒரு அரச சமுதாயத்தை உருவாக்குகிறோம் என்று ஒரு புனிதமான தீர்மானத்தைத் தங்கள் பிரதிநிதிகள் மூலமாக நிறைவேற்றி அந்த அரச சமுதாயத்திற்கு குறிப்பிட்ட ஒரு பெயரைச் சூட்டி அதற்குரிய அரச யாப்பைத் தயாரித்து அக்குடியரசு உருவாகும் அத்தகைய அரச யாப்புத் தான் அக்குடியரசின் ஆட்சிக்கு சட்டவலுக் கொடுக்கிறது. இவ்வாறே ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, பிரான்சு, ஜேர்மனி முதலான நாடுகளில் குடியரசு உருவாகியது. அரச யாப்பை ஆங்கிலேயர் Constitution என்று கூறுவர் ஆனால் அநேக ஐரோப்பிய மொழிகளில் Organic Law என்று வர்ணிப்பர் ஆனால் இரு சொற்களும் உருவாக்கல், அமைத்தல் என்ற கருத்தையே கொண்டுள்ளன.

இத் தத்துவ அடிப்படையை கருத்தில் வைத்துக்கொண்டு இலங்கைக் குடியரசு; (அதன் நாமம் சிறிலங்காக் குடியரசு.) உருவாகிய முறையை சற்று ஆராய்வோம். 1972-ம் ஆண்டுவரை இலங்கை ஒரு முடியாட்சி மகாராணியின் பேரில் தான் சட்டங்கள் இயற்றப் படுவதும் ஆட்சி நடாத்தப்படுவதும் செயல் பட்டது.

1970-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிறிமா அம்மையாரின் கட்சி மக்களின் வாக்கைக் கோரும் பொழுது சிறிலங்கா என்று ஒரு குடியரசைச் சிருட்டித்து அரசமைப்பை தயாரித்து நடாத்த மக்களிடம் ஒரு பணிப்பைக் கோரி தேர்தலில் இறங்கினர். வெற்றியும் பெற்றனர். ஆனால் அவர்கள் அத்தகைய ஒரு பணிப்பை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெறவில்லை. உண்மையில் இவ்விரு மாகாணங்களில் அத்தகைய பணிப்பைக் கோரவுமில்லை; அவர்கள் இம் மாகாணங்களில் பெரும்பாலான ஸ்தானங்களில் அபேட்சகரை நிறுத்தவுமில்லை. அவர்கள் கூட்டிய அரசமைப்பு நிர்ணய சபையிலிருந்து வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர் வாபஸ் செய்து விட்டனர். எனவே அந்த அரச நிர்ணயசபையின் தீர்மானம் வடக்குக் கிழக்கு மாகாண மக்களைக் கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுப் படுத்தாது. எது எவ்வாறுயினும் சிறிமாக் குடியரசைப் பிரஸ்தாபிப்பது பயனற்றது. ஏனெனில் 1977-ல் பெரும் வெற்றியீட்டிய ஜயவர்த்தன அரசு அந்த அரசமைப்பை நிராகரித்து அதன் வழித்தோன்றல் என்று உரிமை பாராட்டாது ஒரு புத்தம் புதிய குடியரசை ஒரு புதிய நாமத்தில் நவமாக உருவாக்கினுர். அந்தக் குடியரசு தான் இப்பொழுது நடைமுறையில் நிகழ்கிறது. அக்குடியரசின் யாப்பின் மகுட வசனம் Preamble 1977-ம் ஆண்டுத் தேர்தலில் தங்கள்கட்சிசிறிலங்காஜனநாயகசோசலிஷக் குடியரசு ஒன்றை உருவாக்குவதற்கு அதிகாரம் வழங்குமாறு ஒரு பணிப்பைக் கோரியதாகவும், மக்கள் பெரும்பான்மை வாக்குகளால் அத்தகைய பணிப்பை தமக்கு விடுத்தனர் என்றும் அந்தப் பணிப்பின் பிரகாரமே, சிறிலங்கா ஜனநாயகச் சோசலிசக் குடியரசு உருவாக்கப்படுவதாகவும் அந்தப் பணிப்பே அரசமைப்புக்கு அதிகாரமும் சட்ட வலுவும் என்று பிரகடனப் படுத்தப்பெற்றிருக்கிறது.

ஆனுல் அந்தப் பணிப்பை, மக்களின் பணிப்பை, அந்த யு. என். பி. வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து பெறவில்லை. ஏனைய ஏழு மாகாணங்களிலிருந்து அத்தகைய பணிப்பை யூ. என். பி. பெற்றது உண்மை. ஆனுல் வடக்குக் கிழக்கு மாகாணமக்கள் பணிப்புத் தருமாறு விடப்பெற்ற கோரிக்கையை நிராகரித்து விட்டனர் அத் தேர்தலில் பதியப்பெற்ற மக்களின் வாக்கு விபரம் பின்வருமாறு

| | பதியப்பெற்ற மொத்த வாக்குகள் | யூ. என். பிக்குக் கிடைத்த வாக்குகள் |
|---|---|---|
| கிழக்குமாகாணம் பத்து தொகுதிகள் (இல: 93 — 102) ஆசனங்கள் | 437,409 | 164,127 |
| வடக்கு மாகாணம் பதினுன்கு தொகுதிகள் (இல: 79—92) | 405,490 | 31,010 |
| மொத்த வாக்குகள் | 842,899 | 195,137 |

யூ. என். பி. யின் கோரிக்கைக்கு ஆதரவாக கிடைத்த வாக்குகள்.

$$\frac{195{,}137 \times 100}{842{,}899} = 23\%$$ மட்டுமே (அண்ணளவு)

எனவே வடக்குக் கிழக்கு மாகாண மக்கள், சிறிலங்காக் குடியரசை உருவாக்குவதில் பங்குபற்றுமாறும் அதற்குரிய பணிப்பைத் தருமாறும் விடுத்த கோரிக்கையை, தட்டவட்டமாக நிராகரித்து விட்டனர்.

இறைமை மக்களுடையது. அது எவ்வகை பாரதீனப்படுத்த முடியாத ஒரு உரிமை. அது அரசியல் ஞானத்தன் அடிப்படைத் தத்துவம் அதைச் சிறிலங்காக் குடியரசின் 1978-ம் ஆண்டு யாப்பே வலியுறுத்துகிறது. இறைமையுடைய வடக்கு கிழக்கு மாகாண மக்கள் சிறிலங்காக் குடியரசை உருவாக்குவதல் பங்குபற்றுமாறும் பணிப்பு வழங்குமாறும் விடப்பெற்ற கோரிக்கை நிராகரிக்கப்பெற்றதால் ஏனைய ஏழுமாகாண மக்களின் பணிப்பின் பேரில் உருவாக்கப்பெற்ற சிறிலங்காக் குடியரசும் அதன் ஆணையும் வடக்குக் கிழக்கு மக்கள்மீது செல்லுபடியாகாது. எனவே ஜயவர்த்தனபுர அரசு வடக்குக் கிழக்கைப் பொறுத்தமட்டில் சட்ட வலுவற்றது. சட்ட வலு அந்த அரசுக்குக் கிடைப்பதாயின வடக்கு கிழக்கு மக்களிடம் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடாத்தி அரசமைப்புக்கு வலுக்கொடுக்குமாறு சாதாக வாக்கைக் கோரல வேண்டும். அவ்வாறு ஜயவாத்தனபுர அரசு சாதகமாக வாக்கைப் பெற்றுல் நாம் ஆயுதங்களைக் கீழ போடுவோம். சட்ட வலுவற்ற படைபல அரசைத் திணிப்பதை எதிர்த்தே நாம் ஆயுதம் எடுத்தோம் நாம் எவ்வகையாலும் சிங்கள மக்கள் மேல் பகைமை கொண்டவரல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுப் பறவைகள்

♥ வஞ்சி ♥

உங்களை-
சுதந்திரப் பறவைகளாக்குவதற்காக
எங்கள்-
வாலிப சுதந்திரங்களைத்
தற்காலிகமாக
அடகுவைத்த
இரவுப் பறவைகள்
நாங்கள்!

'பொடியள்' என்ற
செல்லப் பெயரில்
போர்க்கொடி உயர்த்திய
புரட்சி வீரர்கள்.

எங்களது-
ஆரம்ப வெளியேற்றங்கள்
உங்களுக்கு
இழப்புக்களாகத் தெரிந்தன
எங்களது
ஆரம்ப செயற்பாடுகள்
உங்களைச்
சந்தேகப்பட வைத்தன,
எங்களது அடுத்த படிகள்
உங்களுள் சிலரை
நிலைகுலைய வைத்தன!

நாங்கள்
இரவு நேரத்து
இரத்தப் பறவைகள்!
அதனால் நாங்கள்
தனித்தே இருந்தோம்.

எங்களை நீங்கள்
புரித்து கொள்வதில்
தாமதம் இருந்தது
நியாயமானதே!

இன்னும் இன்னும்
காலம் நகர்ந்திட
எங்களை நீங்கள்
புரிந்திடுவீர்கள்.

செயல்புரிவதையே
நாங்கள் விரும்புவோம்
விமர்சனம் செய்வது
உங்களில் பலருக்குப்
பொழுது போக்கு!

ஆனல்-
தீர்ப்பு வழங்குவது,
அவர்கள் அல்ல!
நாங்கள் தான்!
நாங்கள் இறக்கலாம்.
எங்கள் பாதையில்
இன்னும் இன்னும்
தோழர்கள் வருகிறுர்கள்!!

# எச்சரிக்கை

எனது வீடு முதலில்
எரிக்கப்பட்டது
எனது மக்கள் கூட
எரிக்கப்பட்டனர்
எனது நகரம் பின்னர்
எரிக்கப்பட்டது
எனது கவிதைகளில்
தீ வைக்கப்பட்டது
முகம் தெரியாத அன்னியனே –
இப்போ நீ வைத்த
தீ
என் கவிதைகளுக்கு
மட்டுமல்ல...
உன்-
வரலாற்றிற்கும்
கூடத்தான் .
புரிந்துகொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சிறுவர் பக்கங்கள்

# சாவுக்கு அஞ்சாத சிறுவன்

(இக்கதை முற்றுகைக்கு உள்ளாகியிருந்த லெனின் கிராதின் முன்னணி இளைஞர்களைப் பற்றியது. அளவு கடந்த துணிவும் உறுதியும் கொண்டு இன்னல்களை எதிர்த்து நிற்பது தமது கடமை என்பதை உணர்ந்தவர்கள் இவர்கள்)

தா-தா-தும், தா-தா-அதேபோல் மீண்டும்.

தா-தா-தும், தா-தா.

வெள்ளி எக்காளத்தின் முழக்கத்தைக் கேட்டதும் அல்யோஷா புன்னகைபுரிந்தான் வெடித்திருந்த உதடுகளில் சுருக்கென வலிக்கவே உடன் முகத்தைச் சுளித்துக் கொண்டான். உணவும் ஊட்டமும் இல்லாமல் அவனுக்கு உதடு வறண்டு வெடித்துவிட்டது, அவனால் சிரிக்க முடியவில்லை. முன்னணி இளைஞர் எக்காளத்தின் காலை முழக்கத்தைக் கேட்டதும் அவன் உள்ளம் எப்படிப் பூரிப்புற்றது. முற்றுகை இரவு மேலும் ஒன்று கழிந்து விட்டதைக் குறிக்த முழக்கம் அது. முன்னணி இளைஞர்கள் இன்றும் உயிருடன் தான் இருக்கின்றார்கள். எக்காளச் சிறுவன் தொடர்ந்தும் கடமை ஆற்றுகிறான்! வழக்கம் போல் காலையில் சுற்றிவந்து முழக்கமிடுகிறான்.

எக்காளம் ஊதியது வாஸ்யாதான். தற்போது பாசிஸ்டுகளால் பிடிக்கப்பட்டு விட்ட நகரச்சுற்று வட்டாரம் ஒன்றைச் சேர்ந்த கட்டைகுட்டையான பையன். திடகாத்திரமானவன். அல்யோசா பலமிழந்து, படுத்த படுக்கையாவதற்கு முன்பு அவனுக்குரியதாக இருந்த இந்தக் கடமையை அவன் இந்தப் பையனிடம் ஒப்படைத்திருந்தான். நம்பிக்கையான கரங்களிலேதான் எக்காளத்தைத் தந்தோமென அல்யோசா மனம் மகிழ்ந்து கொண்டான். விமானக் குண்டுகளுக்கும் பீரங்கிக் குண்டுகளுக்கும் அஞ்சாமல் ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தப் பையன் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு வீட்டு வெளிமுற்றத்துக்கும் சென்று சுற்றி வந்தான். எக்காளத்தை மீண்டும் மீண்டும் ஊதி லெனின் கிராது நகரின் சிறுவர் சிறுமியரைத் தளராத உறுதியும் வீரமும் தெளிப்படுத்தும்படி ஊக்கமூட்டி வந்தான்.

முற்றுகை இடப்பட்டிருந்த நகரில் யாவரிலும் அதிகமாய் ஆபத்துக்கு உள்ளாகியவர்கள் சிறுவர்கள் தாம். போர்முனையில், போர் புரிந்தவர்கள் அல்ல. கட்டிடக்கூரையில் பணியாற்றிய தீயணைக்கும்படையினர் அல்ல. ஓயாத குண்டு வீச்சுக்கு இலக்காகிய போர்க்கப்பல் மராத்தின் மாலுமிகளுங்கூட அல்ல. இன்னும் வயது வராதவர்களான சிறுவர் சிறுமிகள்தாம் அதிக அபாயத்துக்கு ஆளாயினர்.

படையாட்கள் போர்க்களத்தில் பகைவர்களுக்குப் பெருஞ் சேதம் விளைவித்து வீர மரணம் எய்தினர். ஆனால் லெனின் கிராது சிறுவர் சிறுமியர் பட்டினிக்கு இரையாகி புற்பூண்டுகளைப் போல் அழித்தொழிக்கப் பட்டனர். படையாட்களுக்குக் கிடைத்த ரொட்டிப் பங்கீடு இவர்களுக்கும் கிடைத்ததென்றாலும் இவர்கள் விரைவில் வதங்கிப் போயினர், குழந்தைகள் வளருகிறவர்கள். போதிய உணவு இல்லாமற் போனதும் தசை நார்கள் பலமிழந்து விடுகின்றன. பிறகு, உறுப்புகள் செயலிழந்து. முடங்குகின்றன. அதன்பின் உறக்கம்தான். நிரந்தர உறக்கம்.........

சாவுக்குப் பணிந்து விடக் கூடாதென்பது அல்யோசாவுக்குத் தெரியும், படைகளை எதிர்த்து வெஞ்சமர் புரியும் படையாளைப் போல் அவன் சாவை எதிர்த்து வீரப்போர் நடாத்தியாக வேண்டும்! அவன் வெற்றிவாகை சூடியாக வேண்டும். அப்போது தன் போரணியில் அவன் தனக்குரிய இடத்தை ஏற்க முடியும். சிறுபையன்கள் உயிருடன் இருந்து வளர்ந்து பெரியவர்களாக விடில் போரில் மடிந்தோரின் இடத்தில் நின்று தொடர்ந்து போராடுவோர் யார்?

மந்த நிலையைக் கருத்தின்மையை அசதியை முதற்கண் எதிர்த்துச் சமாளித்தாக வேண்டும். கைககால்களை மட்டுமாவது கொஞ்சம் ஆட்டியசைத்தாக வேண்டும். இந்தச் சிறுவனால் எக்காளத்தை உயர்த்தி உதடுகளில் வைத்து ஊத முடிகிறதெனில் நிச்சயம் தன்னாலும் தன் கரங்களை அசைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● குட்டிக் கதை

## தன்னம்பிக்கை

அது ஒரு பெரிய குளம்

குளக்கரையில் நீண்ட நேரமாக ஒரு கொக்கு ஒற்றைக்காலில் நின்றபடி மீன்களை பிடித்துக் கொண்டிருந்தது.

சற்றுத்தூரத்தில் ஒரு இளைஞன் கல்லொன்றில் குந்தியிருந்தபடி தூண்டில் போட்டுவிட்டு மீன் எப்போது அதில் கொழுவியிருக்கும் இரையைக் கௌவும் என்பதில் கவனமாக இருந்தான் நீண்டநேரம் ஆயிற்று.

தூண்டிலில் மீன் சிக்குவதாக இல்லை.

ஆயினும் கொக்கு மட்டும் 'லபக் லபக்' கென்று அடிக்கடி மீனைப் பிடித்து விழுங்கியவாறு நின்றது.

இதைக்கவனித்த அந்த இளைஞன் வியப்புமேலிட கொக்கை நோக்கி கேட்டான் - கொக்காரே... நீண்ட நேரமாக தூண்டில் போட்டு காத்திருந்தும் எனக்கு ஒரு மீன்தானும் கிடைக்கவில்லை. நீ மட்டும் அடிக்கடி மீன்களைப் பிடித்தவண்ணம் இருக்கிறாயே எப்படி?

''ஓ... அதுவா'' என்ற கொக்கு தொடர்ந்து சொன்னது ''நான் மீன்களைப் பிடிக்க என்னைமட்டும் நம்பி நிற்கிறேன் ஆனால் நீயோ, ஒரு கருவியை அதாவது தூண்டிலை நம்பிக் காத்திருக்கிறாய் என்றது

வியப்புடன் நோக்கிய இளைஞனைப் பார்த்து கொக்கு உபதேசம் செய்வது போன்று கூறியது.

''சொந்தக்காலே ஊன்றுகோலைவிடப் பலமானது.''

## வருங்காலம்

*தங்க நிலாவின் குஞ்சுகளே — எங்கள்*
*செந்தமிழ்த் தாயின் செல்வங்களே*
*உங்கள் காலம் வருகின்றது — இனி*
*உலகம் உங்கள் காலடியில்...*

*ஈழம் உங்கள் தாயகமாம் — தமிழ்*
*வீரம் உங்கள் தனிச்சொத்தாம்*
*வேங்கை மனத்தால் எதிரிகளை*
*வெற்றி கொண்டு புகழ் சேர்ப்பீர்...*

*கை வீசம்மா கை வீசு — எனப்*
*பாடிய காலம் போயிற்று வெறும்*
*கையை வீசிப் பாடுவதால் — எதிர்*
*காலம் நழுவிப் போய்விடுமே...*

*எங்கள் நாடும் எங்கள் மொழியும்*
*எமதிரு கண்கள் என உணர்ந்தால்*
*தங்கத் தமிழ்த் தாய் மனம்குளிர*
*தனித்துவம் காத்து உயர்வடைவோம்*

*உழைப்பே வாழ்வின் உயிர்மூச்சாம்*
*— நாட்டின்*
*உயர்வே எங்கள் நினைவாச்சாம்*
*ஈழத்தமிழன் எதிர்காலம் — இனி*
*இணையில்லாத பொற்காலம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● கிராமிய பாரம்பரியக்கலைகள்

# 1. நாட்டுக்கூத்து

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் இணைந்ததொரு இனிய கலையே கூத்து. இது கிராமங்களைச் சுற்றியே தோன்றி வளர்ந்த கிராமியப் பாங்குடைய கலையாதலில் இதனை நாட்டுக்கூத்தென்பர். தொன்மையிலும் இது ஏனைய தமிழர் கலைகளைக் காட்டிலும் மிகப் பிள்ளையதல்ல. காப்பியங்களும், புராணங்களும் காவியங்களும் ஆக்கப்பட்ட காலத்திலிருந்தே அவற்றின் கதைகளைப் பாமரர்க்கும் கிராமவாசிகளுக்கும் அவர்களில் கற்றோராக மதிக்கப்படுவோர் கிராமியப் பாணியிலே எடுத்துக் கூறி வந்தனர். அவர்களின் கதை கூறும் பாணி பாமரர்க்கு எளிதில் விளங்கக் கூடிய கிராமியப் பாங்குடைய பாடல்களாகவும், பேச்சுகளாகவும் இருந்தன. உழைத்துக்களைத்த ஊர் மக்கள் மாலைப் பொழுதை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்காகக் கதை சொல்லும் பெரியவரின் வீட்டுத் திணையில் கூடலாயினர். உச்சஸ்தாயியில் பாடும பொழுதும் உணர்ச்சிவசமான கட்டங்களை வபரிக்கும் பொழுதும் அவருடன் சேர்ந்து பாடவும் பேசவும் உதவியாளர்கள் சிலர் இருப்பர். அப்படி உணர்ச்சிவசப்பட்ட நிலையில அவர்கள் எழுந்து நின்று நடிக்கவும் செய்தனர். இவ்வாறு பாடல், பேச்சு, நடிப்பு மூன்றும் சேர்ந்த கூத்து என்னும் கலை உருவானது.

நடித்தல் என்ற நிலைக்குப் பின் திண்ணைகள் மேடைகளாயின. கதை சொல்லும் 'அண்ணாவியார்' எனப்படும் பெரியவர் ஆர்மோனப் பெட்டியுடன் அமர்ந்திருந்து பாடிப் பாடிக் கதை சொல்ல அவருடைய சிஷ்யர்கள் கதையின் பாத்திரத்திற்கேற்ப வேஷமிட்டுப் பாடியும் பேசியும் நடிக்கலாயினர். காலப்போக்கில் திண்ணையில் நிகழ்ந்த கூத்து தெருவிலும், முற்றத்திலும், மரத்தடி குளத்தடி கோயிலடிகளிலும் நிகழலாயின. புராணக் கதைகளையும், இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை, அரிச்சந்திரன் கதை, நல்லதங்காள் கதை போன்ற இலக்கியப் படைப்புகளையும் சாதாரண மக்கள் நாட்டுக்கூத்தின் மூலமே அதிகமாக அறிந்து கொண்டனர்.

இன்று மின்னொளி ஒலிபெருக்கி போன்ற நவீன வசதிகளைக் கொண்ட மேடைகளில் நிகழ்ந்தாலும் கூடத்தின் அமைப்பிலும், பாணியிலும் காலத்தின் மாற்றங்களும், மருவல்களும் மிகக் குறைவே. இதற்குக்காரணம் நாதஸ்வரக் கலையைப் போன்றே நாட்டுக் கூத்தும் பெரும்பாலும் பரம்பரை பரம்பரையாகப் பழக்கப்பட்டு நிகழ்த்தப்படுவது தான். சினிமா, வானொலி, தொலைக்காட்சி, போன்ற நாகரிக பொழுதுபோக்குகளுக்கு மத்தியிலும் மக்களுக்கு நாட்டுக்கூத்தின் பால் நாட்டமும் கவர்ச்சியும் இருக்கவே செய்கிறது, நாட்டுக்கூத்தின் பழமையும், கிராமியப் பாங்கும் அரிதாக நிகழ்தலுமே இதற்குக் காரணம்.

ஒரு கதையை அல்லது கருத்தை சாதாரண மக்களிடையே பரவச் செய்வதற்கும் இலகுவாக விளக்குவதற்கும் நாட்டுக்கூத்தை மிகச் சிறந்த சாதனமெனலாம். ஏனெனில் மிக நீண்ட சிக்கலான இராமாயணப் பாரதம் போன்ற காவியங்களையே அக்கால மக்கள் நாட்டுக்கூத்தின் மூலம் விபரமாக அறிந்து கொண்டனர் இதனாலேயே இன்று பல்வேறு அமைப்புகளும் தங்கள் கொள்கைகள் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதற்கும் பரப்புவதற்கும் நாட்டுக்கூத்தை ஒரு பயனுள்ள வெகுஜனத் தொடர்புச் சாதனமாகப் பயன்படுத்துவதைப் பற்றிச் சிந்தித்து வருகின்றனர்.

நாட்டுக்கூத்தின் மரபு வழி பிரிவுகள் பற்றி அடுத்த இதழில் நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வட்டி"

## எமது கலாச்சாரத்தைப் பாதிக்கும் கொடிய நோய்

ஒரு மனிதனை ஈவிரக்கம் இன்றிச் சுரண்டுவது வட்டி.

ஒரு பன்றியைக் கொலை செல்வதற்கு முன்பு அடிக்கு மேல் அடி கொடுப்பார்கள்.

காரணம் அப்போதுதான் இறைச்சி ருசியாக இருக்குமாம்!

அந்தக் கொடுமையிலும் பார்க்க உயிரோடு இருக்கும் மனிதர்கள் மேல் உள்ள பாசங்களை மறையப் பண்ணுவது வட்டி.

இதனுல்தான் மத்தியகாலத்து ஐரோப்பாவில் வட்டிக்கு பணம் கொடுப்பது பாவம் என்று மக்கள் கருதினுர்கள்.

ஷேக்ஸ்பியர் தான் எழுதிய வணிகன் ஷைலக் எவ்வாறு கடுமையான வட்டியை எடுக்கின்றுன் என்பதை மனதுருக எடுத்துக் காட்டினுர்.

பொதுவாக நோக்கப் போனுல் அவர் சித்தரிப்பது நாடகப் பண்புகளாகவே கொள்ளப்படுகின்றது ஆனுல் உற்றுநோக்குமிடத்து நாகரீகம் மிக்க ஒரு சமுதாயத்தின கலாச்சாரப் பாரம்பரியம் சீரழிவதையே ஷேக்ஸ்பியர் அங்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

மனித நேயத்தை மதிக்கும் கலாச்சார பின்னணியைக் கொண்டவர்கள் தமிழர்கள்! முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியின பண்பும் எடைக்கு எடை தசையைத் தராசில் இட்டு புருவைக் காப்பாற்றிய சிபிச் சக்கரவர்த்தியின பண்பும் எமது கலாச்சாரப் பாரம்பரியத்தின் எடுத்துககாட்டுக்கள்.

அனுராதபுரத்தில் அரசு ஓச்சிய எல்லாள மகாராஜா மக்கள் குறை தெரிவிக்க கட்டிவித்த ஆராய்ச்சிமணியில், மாடு தன் குறையினைத் தீர்க்க மணியினை ஒலித்த கதை மாமன்னர்களும் மனித நேயத்தை நேசித்தமையினையே காட்டுகின்றது. "என் தலையினைக் கொய்து என் தம்பியிடம் கொடு அவன் பொன் தருவான்" என இளவரசன் ஒருவன் புலவனிடம் சொல்லிய கதை இதன் உச்சக்கட்டம்.

மொத்தத்தில் சொல்லப்போனுல் வட்டியை எதிர்பார்த்துத்தமிழன் வாழவில்லை.

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற கீதைப் பேருரைக்கு முன்பே தமிழன் மனப்பான்மை பக்குவப்பட்டுவிட்டது.

"திரைகடல் ஓடியும் திரவியத்தைத் தேடித் தமிழர்கள் உயர்ந்தார்கள்; வட்டியைக் கணக்கிட்டு அன்று!

வட்டி கணக்குப் பார்த்த செட்டியும் வேலையாளும் குளத்தில் விழுந்த கதை நாம் அரிவரியில படித்தது. இன்றும் அது நெஞ்சில் உறைக்கின்றது.

ஆனுல் தமிழர் தமது இன்றைய வாழ்வினில் கடுமையான வட்டியை எதிர்பார்த்து வர்க்கப் பிளவைக் கூட்டி வருகின்றனர். இந்தச் சோழியன் குடுமிகள் எமது கலாச்சாரத்தின் எதிரிகள்.

தமது சகோதரர்களிடமே பணம் கொடுத்துக் கடுமையான வட்டி வாங்கும் பணக்காரத்தனம் கூட எம்மிடையே மலிந்து விட்டது.

"சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காத" செம்மல்களாய் எமது சமுதாயம் சென்று கொண்டிருக்கின்றது. இந்தக் கலாச்சார ஓநாய்கள் பிடியிலிருந்து விடுபடமுடியாது பணம் அற்றேர் திண்டாடுகின்றனர்.

வட்டியைக் கூட முதலாக்கிக் கூட்டு வட்டி அறவிடும் இன்னெரு ஜாதியும் எம்மிடையே இருக்கின்றது இக்குருவிச்சைகள் தாம் உண்டு தம் பாடு உண்டு எனத் திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்களே அன்றிச் சமுதாய மறுமலர்ச்சிக்குப் பாடுபடமாட்டார்கள்.

இவர்கள் இன்றைய சந்ததிக்கு மாத்திரம் அன்றி இனிவரும் இளம் சந்ததிக்கும் யமதூதர்கள்.

நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான நகையை இருபதாயிரம் ரூபாவுக்கு அடைவாக எடுத்துக் கொண்டு - 15 மாதத்தில் அதனை வட்டியும் முதலுமாகத் திருப்பாவிட்டால் 20 பவுண் நகையும் பறிமுதலாகும்.

இப்படி ஒருவர் தனது நகையைத் தனது புண்ணிய பூமியில் இழந்திருக்கிறார்.

இந்த முறையில் தனது பொன்னை விவசாயக் காணிகளை விவசாயிகள் இழந்து இருக்கிறார்கள்.

அந்த வகையில் தமது சொந்த வீட்டை இழந்தவர்களும் இந்த நாட்டில் பலர் உண்டு.

இவர்கள் இவற்றையெல்லாம் எமது பொது எதிரியான சிங்கள முதலாளித்துவத்திடம் நாம் இழந்துவிடவில்லை. எமது மண்ணிலேயே எம்மவரிடம் இதனை இழந்துவிட்டார்கள்,

முஸ்லீம் பணக்காரர் ஒருவரின் வீட்டுக்கு நியாயமான வட்டிக்குப் பணம் எடுப்பதற்காகச் சென்றிருந்தேன்.

''அவர் சொன்னார் மக்காவில் இருந்து எமக்குச் செய்தி வந்திருக்கின்றது வட்டிக்குப் பணம் கொடுப்பது பாவம். எமக்குத் தெரிந்தவர்கட்கு, நண்பர்கட்கு இனி நாம் வட்டியின்றியே பணம் கொடுப்போம்'' இது புதுவகுட சத்தியம்.

''நண்பரே உமக்குத் தேவையான பணத்தை பொறுப்பிற்கு வட்டியின்றி எடுத்துச் செல்க''

அந்த மனப்பான்மை தமிழ் மக்கள் மத்தியில் இனி வரவேண்டும். முக்கியமாகத் தமிழ்ப் பணக்காரர் மத்தியில் ஈரம் சுரக்க வேண்டும்.

பணக்காரர் மனப்பான்மை மாற்றம் அடையாத இடத்து இப்பொருட்கள் யாவும் எமது பொது எதிரியிடம் ஒருநாள்கொள்ளை போகும் எமது கலாச்சாரம் சீரழியும். மொரொக்கோ நாட்டினில் ஒரு பழமொழி உண்டு,

''பணக்காரர்கள்பெட்டிக்குள்பணம்படுத்து உறங்குகின்றது. ஏழைகள் நடுவழியில் தூங்குகின்றார்கள்'' என்று தமிழ்ப் பணக்காரர் கட்கு எமது வேண்டுகோள்!

உங்கள் பெரும் பணத்தில் ஒரு பகுதியையாவது நலிவடைந்தவர்கட்கு வட்டியின்றிக் கொடுங்கள்,

இன்றேல் உங்கள் வீட்டு வாசலில் அகதிகள் தூங்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை மக்கள் வங்கியில் ஆயிரம் போட்டால் 22 வருடத்தில் 1 லட்சமாகும் மனோநிலையில் இருந்து அவர்கள் இன்றும் விடுபடவில்லை.

மக்காவில் இருந்து எமக்குச் செய்தி வராவிட்டாலும் சிதம்பரத்தில் இருந்தும் எமக்குச் செய்தி வரமாட்டாது. அங்கு தான் கூரை ஓடுகளும் தங்கத்தால் எழுப்பப்பட்டு உள்ளதே!

ஆகவே கலாச்சாரம் மிக்க தமிழ் மக்களே... சிந்தியுங்கள். இலட்சியத்தை அடைவதற்கு ஒரு போராட்டம் மாத்திரம் பலன் தராது, எமது சமுதாயம் அழிந்துபோகாது கட்டிக்காக்க எமது மனோநிலையும் மாற வேண்டும்.

இந்தியாவில், தமிழ்நாடு முன்னேறாது கஷ்டப்படுவதற்கு முக்கிய காரணம் கெந்து வட்டிமுறை.

இந்த வட்டி பற்றி அங்கு இருந்தவர்கள் நன்கு உணர்வர்.

நாம் அதிகம் எழுத விரும்பவில்லை.

எமது இலட்சியம் முன்னேற, கலாச்சாரம் பாதுகாக்கப்பட வட்டிமுறை ஒழிய வேண்டும்.

இதுவே நாம் சொல்வது.

''நாம் யார்க்கும் குடியல்லோம்''

எங்கே உங்கள் சொத்து இருக்கின்றதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும்.
—இயேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ சோவியத் கதை

# ஒரு படைத் தலைவர்

மெத்தேலித்ஸாவை வேவு பார்த்து வர அனுப்பிய போது என்னவானாலும் சரி, இரவிரவாகவே திரும்பிவிடு என்று லெனின் ஸோன் கட்டளையிட்டிருந்தான். ஆனால் அவன் அனுப்பப்பட்டிருந்த கிராமம் லெனின் ஸோன் எண்ணியதை விட எவ்வளவோ அதிகத் தொலைவில் இருந்தது. மெத்தேலித்ஸா பட்டாளத்தை விட்டுப் புறப்பட்டது பிற்பகல் நான்கு மணிக்கு. ஐந்து நாள் சலிப்பூட்டும் வகையில் மெதுவாகப் பயணம் செய்தபின் குதிரையைக் கண் தலை தெரியாமல் விரட்டிச் செல்வதில் வெறி கொண்டவன் போன்று, மெல்லிய மூக்குத் துவாரங்கள் குரூரமாக மகிழ்ச்சியுடன் புடைக்க, இரை மீது பாயும் பறவை போல குதிரைக் கழுத்துக்கு மேல் குனிந்தவாறு, பெரும்பாலும் வழிநெடுகிலும் நாற்கால் பாய்ச்சலில் ஓட்டினான். அந்தி மயங்கியது, அப்போதும் சரத் காலத்தைக் காக்க காட்டின் சரசரக்கும் புற்கள், மரணத் தருவாயிலிருந்த பகலின் துயர் ததும்பும் மங்கலில் அவனைக் கடந்து எதிர் விரைந்த வண்ணமாயிருந்தன. கடைசியில் அவன் தைலாக் காட்டிலிருந்து வெளிவந்து பாழடைந்த பழைய குடில் ஒன்றின் அருகே குதிரையை நிறுத்திய போது நன்றாக இருட்டிவிட்டது. குடிலின் கூரை உட்சரிந்திருந்தது. வெகுகாலமாகவே அதில் யாரும் வசிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

குதிரையைக் கட்டிப் போட்டு விட்டு, நொறுங்கும் கட்டைகளைப் பற்றிக் கொண்டு குடிசையின் ஒரு மூலை மேல் தொற்றி ஏறியவன் கூரை உட்சரிந்த இடத்தில் இருந்த இருட்கிடங்கில் விழுந்தெழுந்தான். உளுத்த கட்டை மட்கிய புல் இவற்றிற்கு மட்டும் நாற்றம் அதிலிருந்து அடித்தது. அங்கே முழங்கால்களைப் பாதி மடித்தவாறு பதமாக நின்று, இருளில் கூர்ந்து நோக்கி ஒலிகளை உன்னிப்பாகக் கேட்டான். சுமார் பத்து நிமிடம் இவ்வாறே நின்றான். பின்னணியுடன் அவன் உருவம்சேர்ந்துவிட்டது முன்னை விட இப்போது அவன் இரை மீது பாயும் பறவை போலக் காணப்பட்டான். இருமருங்கிலும் எரிமலைத் தொடர்கள் விண்மீன் செறிந்த அன்பற்ற வானத்தின் பகைப்புலனில் அடரிருட் குகையாகக் காட்சி அளித்தன. அவற்றின் இடையே பிதுங்கியவாறு முகஞ்சுளித்து நீண்டு கிடந்தது இருண்ட தோட்டங்களும் தீனிப்புல் போர்களும் விரவியிருந்த பள்ளத்தாக்கு

சேணத்தில் குறித்த சாலைவழி சென்றான் மெத்தேலித்ஸா உயரமாக வளர்ந்திருந்த புற்களுக்குள் அரைகுறையாகவே புலப்பட்டவை வண்டித் தடங்கள். பிர்ச் மரங்களில் மெல்லிய அடிபாகங்கள் அணைந்த மெழுகுவர்த்திகள் போல இருளில் வெளேரென்று துலங்கின.

ஒரு குன்றின் மேல் ஏறினான். அவனது இடப்புறம் பிரம்மாண்டமான காட்டு மிருகம் ஒன்றின் முதுகு போல நீண்டு வளைந்து சென்றது எரிமலைகளின் கருந்தொடர். ஆறு இரைந்தது. சுமார் இரண்டு மைல் தொலைவில் ஆற்றின் கரையில் போலும் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. அதைக்கண்ட மெத்தேலித்ஸா, மேய்ப்பனின் தன்னந்தனி வாழ்வை நினைவு கூர்ந்தான். இன்னும் தூரத்தில், சாலையிற் மறுபக்கம் ஊர் விளக்குகள் நிலையாக வெளிச்சம் பாய்ச்சியது. வலப்புற மலைத்தொடர்பின்னே ஒதுங்கிக் கரும் இருளில் மூழ்கி மறைந்தது. அந்தத் திக்கில் தரை ஒரேயடியாகச் சரிந்து கொண்டு போயிற்று. பழைய ஆற்றுப் படுகை அங்கிருந்திருக்க வேண்டும். அதை ஒட்டினாற் போல மண்டியிருந்தது இருண்டகாடு.

''அங்கே சதுப்பு நிலம் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது'' என்று நினைத்தான் மெத்தேலித்ஸா. அவனுக்குக் குளிரெடுத்தது. பொத்தான்களின்றிக் கழுத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் திறந்திருந்த இராணுவச் சட்டைக்கு மேலே அதேபோல விரியத் திறந்த மேல் கோட்டை அணிந்திருந்தான். முதலில்நெகிடி அருகே செல்லத் தீர்மானித்தான். கையோடு காவலாக ரிவால்வரை உறைக்குள்ளிருந்து எடுத்துக் கோட்டுக்கு அடியில் இடைவாரில் செருகிக் கொண்டு உறையச் சேணத்தின் பின்னிருந்த பைக்குள் மறைத்துவிட்டான். அவனிடம் துப்பாக்கி இல்லை. இப்போது அவன் வயலிலிருந்து திரும்பும் குடியானவன் போலக் காணப்பட்டான். ஜெர்மானியருடன் நடந்த போருக்குப் பின் அவர்களில் பலர் இராணுவக் கோட்டு அணிவது சகஜமாயிருந்தது.

(தொடரும்)

## நன்றியுள்ள நாயைப் பிடிக்க

— பாலன் —

பாதுகாப்பு
படைகள் சூழ
சபையில் விவாதம்
சூடாய் நடந்தது.

வாலைப் பிடித்துத் திருகி இழுத்தால்
வலிய அடங்கும் சண்டித்தனங்கள்.
ஆகா... என்றனர் அருகிலிருந்தவர்
வாலைப் பிடித்துச் சுண்டி இழுத்தால்
சுருண்டுகிடப்பார் காலடியில்
ஓகோ... என்றனர் மூன்றலிருந்தவர்
வாலை அளந்து வளைத்துப் பிடித்தால்
வசமாய் மாட்டுவார் கூண்டுக்குள்ளே
அச்சா என்றனர் பின்னலிருந்தவர்
வலையை விரித்து ஆளைத்துரததினால்
வடிவாய் வீழ்வார் இருந்து பாரீர்
ஓமோம் என்றனர் கலரியில் இருந்தனர்

பாதுகாப்பு
படைகள் சூழ
சபையில் விவாதம்
சூடாய் நடந்தது.

திருகி இழுப்பதும், சுண்டி இழுப்பதும்
வளைத்து பிடிப்பதும் வலையைவிரிப்பதும்
உயிரோடெரிப்பதும்
உயிரைப் பறிப்பதும்
தர்ம நெறியை மீறுதிருக்கணும்.

மேலே இருந்தவர் உரத்துக் கூவினார்
சபைகலைந்தது
மீண்டும் கூட,

## வெற்றி என்றும் உனக்கே!

மகன்: அப்பாவுக்கு இந்தச் சாவு எப்படி வந்தது?

தாய்: 'ஆமி'க்காரன் சுட்டுப் போட்டான் அதனால் வந்தது.

மகன்: 'ஆமி'க்காரன் ஏன் சுட்டான் அதனைச் சொல்லம்மா!

தாய்: நாம் இந்நாட்டில் தமிழர்கள் அதனால் எம்மைச் சுடுகின்றான்.

மகன்: தமிழர்கள் என்றால் ஏன் சுடவேண்டும்? எனக்குப் புரியவில்லை.

தாய்: தமிழர் உரிமை கேட்பது தவறாம் அதனாலாம் தான் மகனே!

மகன்: அப்படியானால் எமக்கேன் ஈழம் அவன் சொற்படி சேட்டிடுவோம்

தாய்: அது பிழை மகனே அடிமைகளாக நாம் வதை படலாமோ?

மகன்: அடிமைகள் என்றால் வளர்க்கின்ற நாய்போல் ஆவோமோ?

தாய்: நாயிலும் பார்க்கக் கேவலமாக நம்மை மதிப்பார்கள்!

மகன்: என்ன அதிசயம் சிங்களவர்க்கு ஏனிந்த அகங்காரம்?

தாய்: சிங்கம் பெற்ற பிள்ளைகளாம் அவர் எங்களைக் குதறுகின்றார்.

மகன்: நாங்கள் மனிதர்கள் பிள்ளைகள் அன்றோ, நமக்கும் அறிவு ஆறன்றோ?

தாய்: அறும் அறிவைப் பொறுப்புடன் உணர்ந்து செயற்படு என் மகனே!

மகன்: ஆம் ஆம் அம்மா அனைத்துக் கலையும் நான் படித்து உயர்ந்திடுவேன்.

தாய்: தாய்மண் மீது சண்டாளர் கால் படுமெனில் பொடி செய்வாய்?

மகன்: அதற்கே எமது அருமைக் கல்வி அம்மா இது சத்தியம்! புதருக்குள்ளே புலிப்போல் பதுங்கி முறைப்படி பாய்ந்திடுவேன்.

தாய்: அதற்கென் ஆசி நிச்சயம் உண்டு வெற்றி உனக்கே ஆகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சிறுகதை

# கதைகள் கவிதையாகலாம்

அவன் அலுவலகத்திலிருந்து திரும்பும் போதே நன்கு தாமதமாகிவிட்டது. ஊருக்குப் போயிருந்த மனைவியும், குழந்தையும் இன்று வீடு திரும்பியிருப்பார்கள் என்பது அவன் நினைவில் ஒரு பரபரப்பையும், துடிப்பையும் ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும் கடைசி நேரத்தில் அவனிடம் அவனது மேலதிகாரியால் பொறுப்பிக்கப்பட்ட ஓர் அவசரமான வேலையைச் செய்து முடிப்பதற்காக நின்றதால் அலுவலகத்திலிருந்து புறப்படும் போதே தாமதமாகிவிட்டது.

அதற்குப் பிறகும் நேரடியாக வீட்டுக்கு வந்து சேர முடியவில்லை. 'அவங்கள்' நிக்கிறாங்கள், உதால போகாதையுங்கோ'' என்ற எச்சரிக்கை அவனை அரைவழியில் நிறுத்துகிறது. தனது வழமையான பாதையில் போனால் ''கை, கால் உயர்த்தி'' உடற்பயிற்சிகள் செய்யவேண்டி வரலாம் என்பதோடு தனது உடற் பலத்தையும், தனது பிறப்பைப் பற்றியும் 'அவங்கள்' பரிசோதனைகள் செய்யக்கூடும் என்பதாலும் அவன் அந்த வழியைக் கைவிட வேண்டியதாயிற்று.

ஒரு சிலர் துணிவோடு செல்வதைக் கண்டு ஒரு கணம் சலனப்பட்ட மனதிற்கு ''அஞ்சுவது அஞ்சாமை பேதமை'' என்ற குறள் மூலம் சமாதானம் செய்து கொண்டு வேறொரு பாதை மூலம் — வழமையான பாதையை விட மூன்று மடங்கு அதிக தூரமானது அந்தப்பாதை—அவன் வீட்டிற்கு வந்து சேர்ந்த போது இருள் பரவத் தொடங்கிவிட்டது.

தூரத்தில் வரும் போதே வீட்டுவாசலில் அவள் குழந்தையுடன் நிற்பது தெரிகிறது. ஆனால் இருட்டிவிட்ட பிறகும் விளக்கேற்றாமல் இருக்கிறாளே... மின்சாரம் இல்லையோ அல்லது அவளுக்கு ஏதும் சுகயீனமோ என்ற ஐயங்களுடன் சைக்கிளை விரைந்து செலுத்திக் கொண்டு போய் வாசற்படியில் இறங்குகிறான்.

அவள் அவனை அவசரமாக ஒரு தடவை நிமிர்ந்து பார்த்து விட்டு அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே நுழைந்து விளக்கை ஏற்றுகிறாள். அவன் துணுக்குற்ற இதயத்துடன் சைக்கிளை வேலியில் சார்த்தி விட்டு நுழைகிறான்.

என்ன இது? கலகலப்பும், சிரிப்பும், மலர்ச்சியுமாக இருக்க வேண்டியவள் ஏன் இப்படி நடந்து கொள்ளுகிறாள்? என்ன நடந்தது? என்று திகைத்தபடி அவசரமாகக் குழந்தையை வாங்கிக் கொண்டு, 'பிரயாணம் எப்பிடி மீனா? ஒரு கரைச்சலுமில்லையே? என்று கேட்டான். இன்றைய நாட்களில் பிரயாணம் செல்வதற்கு முன் இன்சூர் பண்ணிவிட்டல்லவா புறப்பட வேண்டியுள்ளது.

''இல்லை...இருங்கோ தேத்தண்ணி எடுத்தாறன்'' என்று சொல்லிவிட்டு அடுக்களைக்குள் நுழைந்தாள். அப்போது கூட அவளிடம் சகஜபாவம் நிலவாதது அவன் இதயத்தில் ஊசியேற்றியது.

குழந்தையைக் கொஞ்சுவதையும் மறந்து அவள் பின்னாலேயே அடுக்களைக்குள் நுழைந்தான். அவள் வீடு திரும்புவது தெரிந்தும், தான் அன்று மிகத் தாமதமாக வீட்டுக்கு வந்ததனால் தான் அவள் கோபமாக இருக்கிறபோதும் என்ற ஒரு ஊகத்துடன், ''நான் ஷோட்லீவ் போட்டிட்டு மூன்று மணிக்கே வெளிக்கிட யோசிச்சனான். மீனா. ஆனால் எப்பவும் என்ரை தலைவிதி கடைசி நேரத்திலை தானே வேலையளைக் கொண்டு வாறது'' என் சொல்லிக் கொண்டு அவள் தந்த தேநீரை வாங்கினான்.

சுவாரசியமாக அதைக் கேட்டபடி குழந்தையை அவனிடமிருந்து அவள் வாங்கினாள்.

''நான் நேரத்துக்கு வரேல்லையெண்டு கோபம் போலை அம்மாவுக்கு! நானென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யிறது; வெளிக்கிட்ட பிறகும் ஓடிவர முடிஞ்சுதே? அவங்கள் அறுவாங்கள் வழியிலை எல்லாரையும் மறிச்சு 'செக்' பண்ணிறுங்கள் எண்ட உடனே நான் ஒழுங்கையளுக் காலை வாறன்.''

'அவங்களை'ப் பற்றி சொன்னவுடன் அதிர்ச்சியுடன் தலை நிமிர்ந்த அவன் மறுபடி தலை குனிந்து அவசரமாகக் குழந்தையை இறுக அணைத்தபடி கொஞ்சினாள். அவனுக்கு இப்போது சிறிது பயமாகக் கூட இருந்தது. வீட்டில் தாய் தகப்பனுடன் ஏதாவது தகராறோ அல்லது......

என்ன மீனா இது? நானும் வந்த நேரம் தொடக்கம் பாக்கிறன், மூஞ்சையைத் தூக்கி வைச்சுக் கொண்டிருக்கிறாய்? வீட்டிலை ஏதும் பிரச்சினையோ அல்லது உனக் கேதேன் சுகயீனமோ?

''ஒண்டுமில்லையப்பா.. எனக்கு ஒரே களைப்பாயிருக்குது... பொறுங்கோ நான் பாத்றூமுக்குப் போட்டு வாறன்''

அவனை நோக்கி நிமிர்ந்து ஒரே ஒரு கணம் அவனில் நிலைத்த அந்த விழிகளின் உணர்ச்சி... அதில் தேங்கி நின்ற அடக்க முடியாத சோகம், தாபம், ஏக்கம், தவிப்பு இன்னும் என்னென்னவோ உணர்ச்சிகளை அவை கொட்டித் தீர்த்தன. உதடுகள் சிவந்து, குவிந்து, நடுங்கி..... உடைப் பெடுக்கத் தயாராகும் நீர்த்தேக்கம் போல அவனுக்கா அவளைத் தெரியாது.

இதயத்துள் அமுக்கிவிட முடியாத உணர்ச்சிக் குவியலைத் தனிமையாக வெளியேற்றத்தான் பாத்றூம் போகிறாள். அவனுக்கு என்ன வந்தது? இப்போது ஒன்றும் செய்ய முடியாது. வேளைவரட்டும் என்று எண்ணியவாறு குழந்தையுடன் விளையாடத் தொடங்கினான், அவன்.

தொடர்ந்து மௌன இருள் கவிந்த நிலையில் ஊமைப்படம் போல வழமையான காரியங்கள் நடந்தன. அவள் அடுக்களையைத் துப்பரவு செய்து பாத்திரம் கழுவிவிட்டு வருவதற்காக இவன் படுக்கையில் காத்திருக்கிறான்.

குழந்தை உறங்கி விட்டது.

மெட்டியோசை தயக்கத்துடன் படுக்கையறையுள் நுழைகிறது இவன் கண்களை மூடியபடி படுத்திருக்கிறான். படுக்கையில் அவள் அமர்ந்த பின்னும் சில கணம் நீடித்த மௌனம் அவளைத் துளைத்தெடுக்கிறது.

கண்களை விழித்து அவளை நோக்குகிறான். கண்கள் குளமாகி, மூக்குநுனி சிவக்க, வாய் இதழ்கள் நடுங்க அவள் தேய்புகிறாள். இது அவனுக்குப் புதிது எதையும் எதிர் கொண்டு நின்று போராடும் குணம் அவளுடையது. இவன் கண் கலங்கி நிற்கும் போது அவள் தான் கண்ணீர் துடைத்து ஆறுதல் சொல்வாள் இன்று—

இது என்ன புதிய காட்சி?

அவன் திடுக்குற்று எழுந்து அவளை அணைத்துக் கொள்கிறான்.

''என்னம்மா? என்ன நடந்தது? உனக்குள்ளேயே வைச்சுக் குமுறினால் என்ன பிரயோசனம்? மனம் விட்டுச் சொல்லு'' என்று ஆதரவாகக் கேட்கிறான் விம்மல்கள், விசும்பலாகி, வேதனை வெள்ளம் கரையுடைத்தாற் போல் அவள் குலுங்கினாள்.

''என்னை மன்னிச்சிடுங்கோ அத்தான், நான் பெரிய பிழை செய்து போட்டன்''... தொடர்ந்து பேசமுடியாமல் விம்மினாள்.

''இதென்ன மீனா? எங்களுக்குள்ளை என்ன மன்னிப்பு! பிழை விடுகிறது எல்லாரும் தானே, நீ கொஞ்ச நேரம் ஆறுதலாய் படுத்திருந்திட்டு மெல்ல விசயத்தைச் சொல்லு'' என்று அவளை ஆசுவாசப்படுத்தி கட்டிலில் படுக்கச் செய்தான்.

முகட்டை வெறித்துப் பார்த்தபடி மல்லாந்து படுத்திருந்த அவளைக் கடைக்கண்ணால் அவதானித்தபடி அவனும் பேசாமல் படுத்துவிட்டான். அவள் விழிகளில் அந்தச் சம்பவம் நிழலிட்டது.

★ ★ ★

அன்று பகல் பிரயாணத்தின் போது..

எதிரில் வந்த பஸ் இவர்கள் பஸ்சை மறித்து, ''வழியில் அவங்கள் நிக்கிறாங்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற செய்தியைக் கூறிய போது எல்லோரும் தங்கள் அடையாள அட்டைகளையும், பார்சல்களையும் சரிபார்த்துக் கொண்டார்கள்.

அப்போது இவளருகில் இருந்த இளைஞன் ஒருவன் பதற்றத்துடன் அங்குமிங்கும் பார்ப்பதையும், கையிலிருந்த சிறு பார்சலை வைக்க ஓரிடம் தேடுவதையும் அவதானித்தாள். அவனிடம் பைகள் எதுவும் இருக்கவும் இல்லை.

யாரோ திருட்டுப் பயல் என்ற அலட்சியத்துடன் அவன் முகத்தையும், கையிலிருந்த பார்சலையும் கவனித்தவள் திடுக்குற்றாள். தான் நினைத்தது தவறு என்பது மட்டுமல்ல, அவனுக்கு முன்னே இருக்கும் ஆபத்தின் கனபரிமானம் அவள் நெஞ்சில் உறைத்தது

அவன் திடீரென எழுந்து பஸ்சை நிறுத்துவதற்காக மணியை அடித்தான். அபாயத்துக்கு முன் இறங்கிப் பாதை மாறிவிடலாம் என்று அவன் நினைத்தது முடியாமல் போய்விட்டது. அந்த அபாயம் கண்ணுக்கு முன்னால் தென்பட்டேவிட்டது.

நினைப்பதற்கு நேரமில்லை அவளுக்கு என்ன தோன்றியதோ உடனடியாகத் தனது பையினைத் திறந்து துணிகளுக்கிடையில் அந்தப் பொதியினை உள்ளே வைத்து மூடிவிட்டாள். அவசரமாகக் குழந்தையை அவனிடம் கொடுத்து விட்டு நிமிரும் போது பஸ் நிறுத்தப்பட்டு யாவரும் இறங்கத் தொடங்கியிருந்தனர்.

வாயில் சுட்டுவிரலை வைத்து அவனை எச்சரித்தபடி அவனருகிலேயே இறங்கி நின்றாள்.

விடுவிக்கப்பட்ட அநாவசியமான வினாக்களுக்கு விடைகள் கொடுக்கும் போது அவனுடைய மனைவி அவள், அவனுடைய குழந்தை அது என்றும் உறுதி செய்ய நேரிட்டது.

இளைஞர்கள் பலரைத் தடுத்து வைத்துக் கொண்டு பஸ் அனுப்பப்பட்டது அவன் 'குடும்பஸ்தன்' என்பதால் அவனை விட்டு விட்டார்கள்.

# மாறும் நியதிகள்

*மரணம்...*
*நிச்சயமானதுதான்*
*ஆனால் இப்போதெல்லாம்*
*அகால மரணங்களே*
*நிச்சயிக்கப்படுகின்றன,*
*எருமையை விட்டு...*
*யமன்,*
*கவசவாகனங்களில்*
*பஸ்களில், வான்களில்*
*'ட்ரக்'குகளில், 'ஜீப்'களில்*
*எதிலும் வரலாம்...*
*இந்த மண்ணின்*
*வடக்கிலும் கிழக்கிலும்*
*இதுதான் நியதி;*
*இப்போதும்,*
*தெற்கிலிருந்தே*
*யமன்கள் வருகிறார்கள்*
*அதிலே மாற்றம்*
*கொஞ்சமுமில்லை.*
*வீதிகள், வீடுகள்*
*மயானங்களாகி...*
*அழுகையும் அவலமும்*
*வாழ்க்கைகளாகி...*
*ஓடி, ஒழிந்து*
*நடுங்கவா பிறந்தோம்?*
*வெட்கம், வெட்கம்...*
*மரணம் நிச்சயம் ..*
*மரணம் நிச்சயம் ..*
*செத்தோ வாழ்வது ..*
*சீச்சீ வெட்கம்*
*வாழ்ந்தே சாவோம்...*
*வா என் தோழா...*
*தெற்கிலிருந்து வரும்*
*யமனை வீழ்த்திட...*
*வடக்கிலும் கிழக்கிலும்*
*புயலாய் மாறுவோம்*
*மரணம் இனிமேல்*
*யமனுக்கு மட்டுமே ..*
*மனிதருக்கெல்லாம்*
*வாழ்க்கைகள் மட்டுமே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் புறப்பட்டதும் அவள் அவசரமா கக் குழந்தையை வாங்கிக்கொண்டு வேருெரு ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டாள். தீயில் இருப்பது போல அவள் துடித்துக் கொண்டிருந்தாள்.

அவன் கண்களில் நீர் மல்க நன்றி யுடன் அவளைக் கைகூப்பி வணங்கிவிட்டு பொதியினை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு சிறிது தூரம் போனதும் பஸ்ஸை மறித்து இறங்கிச் சென்று விட்டான்.

ஒரு தேசிய சொத்து பாதுகாக்கப்பட் டது. தனது இனத்திற்காக அவள் தன்னுல் இயன்றதைச் செய்துவிட்டாள், ஆனுல், அவள் மனம் தவித்துக் கொண்டிருந்தது. தான் செய்தது எவ்வளவு தூரம் சரி?

அவள் ஒரு தமிழ்ப் பெண், கணவனைத் தவிர வேருெருவரை மனத்தாலும் நினை யாத கற்பின் திறம் போற்றும் தமிழ்ப் பரம்பரையில் வந்தவள் ஏதோ ஒரு அவ சரத்தில்-சுதந்திர வேட்கையும், வீர உணர்ச் சியும், தூண்டிவிட அவள் இதனைச் செய்து விட்டாள்.

ஆனுல்-

மாற்றான் ஒருவனைத் தன் கணவன் என்று அம்பலத்தில் சொன்னவள், கூசா மல் அவன் குழந்தை என்று தன் மழலையைக் காட்டியவள்.... ...

இனி எப்படிக் கணவன் முகத்தில் விழிப் பது? அவள் இதயத்தில் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அவளைச் சூழ்ந்திருந்து கொடும் தீப்பிழம்பு அவளைப் பொசுக்குவது போலிருந்தது.

கற்பு எனப்படும் தீ இதுதானே?

★ ★ ★

இதயச் சுமை இறக்கி வைக்கப்பட்டு விட்டதால் கன அழுத்தம் குறைந்து விட் டது போல அவன் குமுறல் ஓய்ந்து மெல் லிய விம்மல்கள் வெளிப்பட்டன. அவனது பாதங்களை இறுகப் பிடித்தபடி கண்ணீர் வடித்தாள் அவள்.

இவனுக்கு அந்தச் சம்பவத்தையே நம்ப முடியவில்லை இகில் மிகுந்த ஒரு திரைப் படத்தைப் பார்த்தது போல-கதை ஒன் றைப் படித்தது போல இருந்தது. அவ ளையே சிறிது நேரம் உற்றுப் பார்த்த வண் ணம் மௌனமாக இருந்தான். அந்த மௌனம் அவளை அறுத்தது. தன்னை அவன் கால்தூசியாக எண்ணி விடுவானே என்று அவள் பயந்தாள்.

அவள் மௌனம் கலைந்தது.

''மீனு! அடி அசட்டுப் பெண்ணே! நான் கடைத்தேறிவிட்டன் எண்டு பெரு மைப்படுகிறன்.''

அவள் திடுக்கிட்டாள். இவன் என்ன கேலி செய்கிறுனு? அவனைத் தயக்கத்துடன் நிமிர்ந்து நோக்குகிறுள், அவன் நிதானமா கத் தொடர்கிறுன்.

''ராமபிரான் அணை போட்ட பொழுது அணில் செய்த உதவி உனக்குத் தெரியும் தானே? போராட்டங்களிலை எல்லாரும் களத்திலை இறங்க முடியாதுதான். ஆனுல் அவனவன் இயண்ட வகையிலை முடிஞ்ச அளவு உதவியைச் செயயிறது அவசியம் அப்பிடி ஒரு பேருதவியை நீ— இன்டைக் குச் செய்திருக்கிறுய்.''

'பொடியள் செய்யிறதுகளின்ரை சரி பிழை பற்றி வாயோயாமல் கதைக்கிறது தவிர ஒரு துரும்பைத் தனினும் அசைக் காதவை தானே நாங்கள். அப்படியிருக்க, என்னுலை கூடச் செய்ய முடியாத ஒரு வீர மான காரியத்தை நீ செய்திட்டு வந்திருக் கிறுய். பெருமைப்பட வேண்டிய நீ எதுக் காக இப்பிடி மனம் வெதும்ப வேணும்?,'

''சினிமாவிலை கட்டின கணவனுக்கு முன்னுலை வேருெருத்தனோடை கட்டிப் புரண்டு போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழ் பெண்மணிகளும் எங்களுக்கை தானே இருக்கினம்'' நீ வாயாலை ஒருத்தனை உன்ரை கணவன் எண்டு சொல்லிப் போட்டாய்? ஆனுல் அது ஏன் எண்டது தானே முக்கியம்.

''அந்த ஒரு பொய்யினுலை நீ ஒரு உயிரை மட்டும் காப்பாத்தேல்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 பலஸ்தீனக் கவிதைகள்

## சிறையிலிருந்து எழுதும் கடிதம்

அம்மா
நண்பர்கள் என்னைத் தேடி வந்து
கதவிலே தட்டும்போதெல்லாம்
தாயே, நீ விம்மிக் கண்ணீர் மல்குவதை
எண்ணி நான் வேதனைப்படுகிறேன்.

ஆனால் வாழ்க்கையின் சிறப்பு, என்
சிறையிலே பிறக்கிறதென்று
நான் நம்புகிறேன் அம்மா
என்னை இறுதியில் சந்திக்க வருவது
ஒரு குருட்டு வௌவாலாய்
இருக்காதென்றும் நான் நம்புகிறேன்.
அது பகலாய்த்தான் இருக்கும்
அது பகலாய்த்தான் இருக்கும்.

## எதிர்த்து நில்

அவர்கள்
ஒரு பேப்பரையும் பேனையையும்
என் முகத்தெதிரே விசுக்கி எறிந்தனர்.
என் வீட்டின் திறப்பை
என் கையில் திணித்தனர்.

என்னைக் கொண்டு
பேப்பரை மாசுபடுத்த அவர்கள் விரும்பினர்
பேப்பர் சொன்னது: *எதிர்த்து நில்*
என்னைக் கொண்டு
பேனையை அவமானப்படுத்த அவர்கள்
விரும்பினர்
பேனை சொன்னது: *எதிர்த்து நில்*

என் வீட்டின் திறப்பு என்னிடம் சொன்னது
உன் சின்னஞ்சிறு வீட்டின்
ஒவ்வொரு கல்லின் பெயராலும்
நீ *எதிர்த்து நில்*

சுவரில் ஒரு தட்டு;
துண்டிக்கப்பட்ட ஒரு கையில் இருந்து
சுவரின் குறுக்காக வந்த ஒரு செய்தி
குறிப்பால் உணர்த்தியது: *எதிர்த்து நில்*

சித்திரவதை அறையின் கூரைமீது
சொட்டுச் சொட்டாய் விழும்
ஒவ்வொரு மழைத்துளியும் அலறியது;
*எதிர்த்து நில்*

## அலுகோசு

ஒரு கயிறு
ஒரு சுத்தியல்,
ஒரு இரும்புக் கம்பி
தாருங்கள் எனக்கு;
ஒரு தூக்கு மரத்தை நான் ஆக்குவதற்காக.

எங்கள் மத்தியில்
இன்னும் ஓர் கும்பல்
எஞ்சியுள்ளது.
அவமானத்தை அது சாப்பிடுகின்றது
தலைகுனிந்து நடந்து செல்கின்றது.
அவர்களின் பிடரியை நிமிர்த்துவோம் நாங்கள்

எதிர்ப்படும் ஒவ்வொரு கையையும்
நக்கும் ஒருவனை
எப்படி நாங்கள் எம்மிடை வைக்கலாம்?

*ஒரு இனத்தின்ரை மானத்தை காப்பாத்தியிருக்கிறாய் ஒரு இயக்கத்தின்ரை பாதையிலை இருந்த தடைக்கல்லை அகற்றியிருக்கிறாய்.*

*"பங்களாதேஷ் விடுதலைப் போரிலை ஒரு பாலத்துக்குக் கீழை பதுங்கியிருந்த அத்தனை பேரையும் காப்பாத்த வேணும் எண்டதுக்காக அழத்தொடங்கின தன்ரை குழந்தையின்ரை அழுகைச் சத்தம் வெளியிலை கேளாமல் வாயை அமுக்கிப் பிடிச்சிருந்தவள் ஒரு மாதரசி. படைவீரர்கள் போனாப் பிறகு அவள் தன்ரை மடியிலை கண்டது மூச்சுத்திணறி உயிர் போன தன்ரை குழந்தையின்ரை சடலம்."*

*"இதுதான் தியாகம், கற்பு என்கிறது வெளிவேஷங்களாலை வாறேல்லை மீனு! 'மனப்பூர்வமான பதிபக்திதான் கற்பு' நீ மனத்தளவிலை எனக்கு எந்த ஒரு துரோகமும் செய்யாத வரையிலை ஏன் கவலைப்படுகிறாய்? நீ செய்த காரியத்தைப் பற்றிப் பெருமைப்படு, நானும் பெருமைப்படுறன்."*

*அவனுடைய உறுதியான நிதானமான அந்த வசனங்கள் அவளுடைய நொந்த இதயத்துக்கு ஒத்தடம் கொடுக்கின்றன.*

*அவளைச் சுற்றிலும் - அவள் இதயத்திலுள்ளும் கனன்று கொண்டிருந்த தீக்கங்குகள் அவனுடைய குளிர்ந்த கருணை மழையில் தணிகின்றன.*

***அவனது அகன்ற மார்பில் தலை வைத்து அமைதியாக உறங்குகிறாள் அந்த வீரப்பெண்மணி.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் உதவி

● அதன் அவசியமும் சிகிச்சை முறைகளும்

இலங்கையில் இன்று தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசியல் பொருளாதார ரீதியாக பின்தள்ளப்பட்டுள்ள இவ் வேளையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினாலும் பெருமளவு பாதிக்கப்பட்டு வருகின்றார்கள் இன்றைய சூழ்நிலையில் எம் மக்களின் உயிர்கள் வீதிகளிலும் வீடுகளிலும் பரிதாபமான முறையில் பறிக்கப்பட்டு வருகின்றது இந் நிலையில் எம் மக்களின் உயிரைப் பாதுகாப் பதற்கு வேண்டிய முதலுதவியின் அறிவை அனேக மக்கள் பெற்றிருக்காமையினால் ஒரு சிலரின் உயிர்களை மீண்டும் பெறமுடியாது, வீதிகளிலும் வீடுகளிலும் உயிர்கள் வீணாக உடலை விட்டுப் பிரிகின்றது முதலுதவி தெரிந்தவராக விருந்தால் இயன்றளவு மக்களின் உயிரைப் பாதுகாக்க முடியும்.

ஒருவர் காயப்படும் வேளையில் அருகிலுள்ளவருக்கு என்ன செய்வது எப்படிச் செய்வது என்று தெரியாது. அவ்வாறு தெரிந்தவர்களோ காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப் பயந்து தெரியாதவரைப் போல் இருப்பதுவும் உண்டு. முதலுதவியைச் சிலர் எல்லோரும் படிக்கின்றார்கள் நானும் படிப்போம் என்று நினைத்து படிக்கின்றார்கள் இன்னும் சிலர் தங்கள் வீட்டில் காயம் ஏற்பட்டால் கூட அதற்குரிய முதலுதவி சிகிச்சை அளிக்காது இரத்த வெள்ளத்துடன் தனியார் வைத்தியசாலைக்கு (Private Hospital)க்கு கொண்டுசெல்கின்றார்கள். சிலர் சில துறையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் அதை நடைமுறைப் படுத்துவது இல்லை இன்று ஆட்சியாளரின் அடாவடித் தனத்தினால் எம்மக்களிற் சிலர் தம்முயிருக்காகவும், பணத்திற்காகவும் தம் சுயதேவைகளைக் கருத்திற் கொண்டு வெளிநாடு செல்லுகின்றார்கள். வெளிநாடு செல்லுகின்றோர் வரிசையில் மிகவும் கூடுதலான நிலையில் அங்கம் வகிப்பவர்கள் மருத்துவத்துறையைச் சார்ந்தவர்கள். இலங்கை இன்று இக்கட்டான சூழ்நிலையில் இருக்கின்ற இவ் வேளையில் இவர்கள் வெளிநாடு செல்வதனால், இன்று எம் மக்கள் பல இன்னல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

எமது அழிவை நாம் ஓரளவிற்கு தடுக்க வேண்டுமானால் பரவலாக எல்லாத் தமிழ் மக்களிற்கும் இன மத பேதமின்றி வயது முதிர்ந்தவர்கள் என்ற உணர்வின்றி முதலுதவி பயிற்சி அளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராம மட்டங்களிலும் முதல்உதவி நிலையங்கள் அமைக்கப்பட்டு அங்குள்ள அனைவருக்கும் முதல் உதவி பற்றிய அறிவுரைகள் வழங்கப்படவேண்டும். ஒவ்வொரு நிலையத்திலும் குறைந்த பட்சம் 10 பேராவது முதலுதவிப் பயிற்சியைப் பூரணமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

இன்று கிராம மட்டத்தில் மக்கள் சுகாதாரமும் ஆரம்ப சுகாதார குழு போன்ற சில நிறுவனங்களினால் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இவ் நிறுவனங்கள் பரவலாக ஒவ்வொரு இடங்களிலும் அமுல்படுத்தல் மிகவும் அவசியமானதாகும். இன்று இந்நிறுவனங்கள் சேவை கருதி மக்களுக்குப் பயிற்

## தேசிய இனம் என்றால் என்ன?

தேசிய இனம் என்பது சரித்திர பூர்வமாக, சரித்திரத்தின் போக்கில் வளர்ந்துள்ள மககளின் ஸ்திரமானதொரு சமூகம், நான்கு பிரதானமான குணதிசயங்களைக் கொண்டது அது; அதாவது பொது மொழி, பொதுவான நிலப்பரப்பு, பொதுவான பொருளாதார வாழ்வு குறிப்பிட்ட பொதுவான தேசீய கலையாகப் பிரதிபலிக்கும் பொதுவான மனோபாவம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும்.

— ஸ்டாலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியை அளிக்கின்ற வேளையில், எம்மக்களில் சிலர் தம் பிள்ளைகளை பயிற்சி வகுப்பிற்கு கூட அனுப்புவதற்குப் பின் நிற்கின்றார்கள். தமிழ் மக்களினது அழிவைப் பாதுகாப்பதற்காகத் தான் இன்று இந் நிறுவனங்கள் இம் முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. எனவே, இவர்களின் முற்போக்கான செயலிற்கு மக்கள் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும்.

முதலுதவியின் அவசியத்தை முதலில் மக்கள் உணர வேண்டும் முதல் உதவி நிலையங்கள் கிராம மட்டத்தில் ஆரம்பிக்கப் பட வேண்டும். என்பதற்கு பல காரணங்களைக் குறிப்பிடலாம். தமிழ் மக்கள் சொல்லமுடியாத கஷ்டமான சூழ்நிலையில் இருந்து வருகின்றார்கள் அரச பயங்கரவாதிகளினால் ஏற்படுத்தப்படும் காயங்கள் ஒருபுறம், மறுபுறம் காயம் அடைந்தவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுவதற்கு வாகன வசதியின்மை. குறிப்பாக வாகனம் இருந்தும் எரிபொருள் அற்ற நிலை. இரவு நேரத்தில் வீதியில் செல்வதற்கு பாதுகாப்பு இன்மை இந் நிலையில் மக்களின் உயிர் அநியாயமாக இழக்கப்படுகின்றது இத்தகைய துர்ப்பாக்கிய மரணங்களுக்கு யார் காரணம்? நிச்சயம் இத்தகைய மரணங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மக்களும் பொறுப்பாளி ஆவர்.

இந்நிலை மாற வேண்டுமானால் கிராம மட்டங்களில் முதலுதவி சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிப்பதுடன் கிராமமட்டத்திலுள்ள துணிவுள்ள ஆண் பெண் இருபாலாருக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இத்தகைய அமைப்புக்களை உருவாக்குவதனால் எமது இளைய தலைமுறையினரை தட்டி எழுப்புவதுடன் அவர்களுக்கு முன்னேற்றத்திற்கான பாதையைக் காட்டி அவர்களைக் கொண்டு ஓர் புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும் இத்தகைய இளைஞர்களுடன் பொது தாபனங்கள் இணைந்து ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்களைத் திரட்டி இப் பயிற்சியினை பூரணமாக பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

முதலுதவியினால் எம்மக்களையும். எம் மக்களின அழிவையும் ஓரளவிற்கு காப்பாற்றிக் கொள்வதற்கு உறுதுணை உள்ள ஓர் சாதனமாக முதலுதவி மிளிரும்.

—தொடரும்

# குருவிச்சைகள்..

நமக்கும் மேல்
நம் இலட்சியங்களில்
பற்றுவைத்தவர்கள் போல்,
பேசுவார்கள்
எழுதுவார்கள்
நமக்கும் மேல் நம் எதிரிகளைக்
காரசாரமாகக்
கண்டிப்பார்கள்
விமர்சிப்பார்கள்
நமக்கும் மேல்
நம் வெற்றிகளைக்
கொண்டாடுவார்கள்
குதூகலிப்பார்கள்
நமக்கும் மேல்
நம் தோல்விகளில்
துவள்வார்கள்
துடிப்பார்கள்
ஈற்றில்
எங்கள் இலட்சியங்களால்
தங்கள் இரும்புப் பெட்டிகளை
நிரப்பிக் கொள்வார்கள்
எல்லோரும்
இவர்களை
அடையாளம் காணும் வரை
இவர்களின்
இரும்புப் பெட்டிகளும்
கூடாரங்களும்
இன்னும் கொஞ்சம்
நிரம்பட்டும்.

--புலிகேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம் செய்திடுவோம்

போர் நிறுத்தம் செய்திடுவோம், நாம் போர் நிறுத்தம் செய்திடுவோம். உயிர்பல நிறுத்திடவும், தொண்டர் பல மடிந்திடாமல் சொத்தும் பல அழிந்திடாமல் தடுத்திடவும், மக்கள் துயருறும் நிலை மறைந்திடவும் போர் நிறுத்தம் செய்திடுவோம்.

நம் இலட்சியம் நிறைவேறிய பின், நமக்கென ஒரு நாடு கண்டபின், தங்கத்தமிழ் ஈழத்தை மீட்டபின், பல தொண்டர்கள் தம் இன்னுயிரை களப்பலி இட்ட போது முழங்கிய முழக்கங்கள் நிறைவேறிய பின் போர் நிறுத்தம் செய்திடுவோம்.

பண்டா, செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட வரலாறு படித்த நாம்.

வட்டமேசை மகாநாடு ஏமாற்றப்பட்ட விதம் பார்த்த நாம் இன்னுமொரு ஏமாற்றத்தைச் சந்திக்கத் தயாராக இல்லை. ஏமாற்றுவது எதிரிக்கு கைவந்த கலையாக இருக்கலாம், ஏமாற்றப்படுவது எமது வரலாறாக இருப்பதை நாம் விரும்பவில்லை. கிளரிய உப்பை அடி உதை கிடைத்த போதும்போட மறுத்துவிட்டார் காந்தி அன்று.

நாம் மட்டும் எம் இலட்சியம் நிறைவேறிடாமல் எப்படி ஆயுதத்தை கீழேபோட முடியும்.

போர் நிறுத்தம் பற்றி பேசுவது, சிந்திப்பது எதிரிக்குப் பலம். எமக்கு அது பலவீனம்.

பேச்சுவார்த்தைக்குச் செல்வது, செல்ல முயற்சிப்பது, எதிரிக்குச் சாதகம். எமக்குப் பாதகம்.

பேச்சுவார்த்தை எனும் பசப்பு வார்த்தையில் ஏமாந்திடாமல் தொடர்ந்து நடாத்தும் போராட்டத்தில் இறுதி வெற்றி கிடைத்தபின் களத்தில் நின்று நாம் போர் நிறுத்தம் செய்திடுவோம்''

# எரியும் உணர்வுகள்!

நெஞ்சத்தின் குமுறல்களில்
நினைவலைகள் கொதித்தெழுகிறது
நினைவு அனல் மூச்சுக்களின்
தகிப்புகள் மனதை
வெறுமையாக்கி விடுகின்றன......

பாதுகாப்பு படையினர் (?)
காவல் இல்லாத
வேலி தாண்டி
கற்புக் கனிகளை
கொள்ளையடித்து செல்கின்றனர்...

இரக்கம் அற்ற
அரக்க கூட்டங்கள்
நடத்துப் வெறியாட்டங்களில்
பச்சிளம் குழந்தைகளும்
விதி விலக்காகவில்லை......

ஜனநாயகம்
என்ற போர்வையில்
சர்வதிகார ஆட்சி
தர்மிஷ்டர் நடத்துகிறான் (?)

தோழர்களே! ......
வாழ்வின் ஏக்கங்களுக்கும்
கொடுமைகளுக்கும் விடிவுகாட்டும்
ஆயுதத்தை ஏந்தி புறப்பட்டீர்கள்
இதுவே வழியென்று
துணிவு கொண்டீர்கள்......

நீங்கள் சிந்திய
இரத்தம்—இந்த மண்ணில்
ஆயிரம் காவியம் படைக்கும்
அப்போது உங்கள்
நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை காவல் காக்கும்

---சௌந்தரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முன் அட்டை உட்புறத்தொடர்ச்சி)

வியாபாரவிளம்பரம் என அலட்சியம் செய்து விட முடியாது.

கீழ்வரும் வசனங்களைக் கவனியுங்கள்

''சிலுக்கின் குலுக்கல் நடனங்களும், அனுராதாவின் கவர்ச்சி நடிப்பும் கொண்ட அற்புதப் படம்.....''

''அவளோட இரவுகள் — ஒரு பெண் பல ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் அபூர்வமான படம்''

''Private Lessons' அந்தரங்கமான பாடங்களைப் பற்றிய ஒப்பற்ற திரைப்படம்''

ஏராளமான கற்பழிப்புக் காட்சிகளும், கொலைச்சம்பவங்களும் நிறைந்தபடம்''

''Nana' பாலியல் காட்சிகள் நிறைந்த அற்புதமான திரைப்படம்''

இப்போது சற்று யோசிப்போம்: மனிதனின் பலவீனங்களுக்கும், குரூரமான ஆசைகளுக்கும், வெறியுணர்வுகளுக்கும் தீனி போட்டு அவர்களை மந்தபுத்தியுள்ளவர்களாக பண்பாடற்ற மிருக உணர்வு மிக்கவர்களாக, அற்வுமயங்கி லவர்ச்சயின் மாயைகளில் சிக்கி சீரழியவைக்கும் கோழைகளாக மாறவைக்கும் இத்தகைய விளம்பர வாசகங்கள் ஒவ்வொரு மினித்திரையரங்கு வாசல்களிலும் வரவேற்புக் கூறி நிற்பது ஆரோக்கியமானதொன்றல்ல.

சமீபகாலங்களில் இத்தகைய மினியரங்குகளிற் சில நீலப்படங்கள (Blue Film) என அழைக்கப்படும் ஆபாச திரைப்படங்கள் காட்டியதற்காக விடுதலை ஸ்தாபனமொன்றினால் எச்சரிக்கப்பட்டதும், வீடியோ படப்பிரதுகள் பறிமுதல செய்யப்பட்டதும் தெரிந்த விஷயமாகும்.

ஒருபுறம் கலாச்சாரச் சீரழிவு; மறுபுறம் விடுதலை போராட்ட நடவடிக்கைகளைக் கொச்சைப்படுத்தும் அல்லது திரிபுபடுத்தும், ஹொலிவூட், அமெரிக்க திரைப்படங்களின் பலடமயடுப்பினால் ஏற்படும தவறுன உணர்வுகளும், கணிப்பீடுகளும

- இராணுவ அட்டூழியங்கள்
- கவசவாகனத் தாக்குதல்கள்
- முகாம் முறியடித்தல்கள்
- ரொக்கட் லோஞ்சர் போன்ற அதி பயங்கர ஆயுதங்களைக் கொண்ட தாக்குதல்கள்

இவையெல்லாம் என்ன? .. நமது இளைஞர்களுக்கு இன்றைய தேவையான நடைமுறை பாடங்களாம்.

'இது இன்றைய இளைஞர்களுக்கு சமர்ப்பணம்' என்று கூட பகிரங்கமாக விளம்பரமும் செய்கிறார்கள்.

இந்தப் படங்களில் காட்டப்படுவது தான் என்ன?

அமெரிக்காவும், அதன் சகாக்களான பிரிட்டன் இஸ்ரேல் போன்ற நாடுகளும் அவற்றின் பெயர்பெற்ற உளவு நிறுவனங்களும, மற்றும் சர்வதேச கூலிப்பட்டாளங்களும் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்கும் அடக்கி ஒடுக்கப்படும மக்களின் கிளர்ச்சிகளுக்கும் எதிராக எடுக்கும் எதிர்புரட்சி நடவடிக்கைகளேயாகும்.

அமெரிக்காவினதும் அதன் தோழமை நாடுகளினதும் நடவடிக்கைகளை நியாயப் படுத்துவதும. அவற்றின வீரதீரங்களை பறைசாற்றுவதுமே இப்படங்களின நோக்கமாகும்.

தமிழ் மக்களை, குறிப்பாக இளையதலைமுறையினரை கலாச்சார ரீதியாகவும் அறிவியல ரீதியாகவும நாசப்படுத்தும் இத்தகை காட்சியரங்குகளை இப்படியே வளர, பெருக விடுவது அறிவு பூர்வமான தொன்றல்ல.

உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் நாசப்படுத்தப்படும் இத்திரையரங்குகளின் வாடிக்கையாளர்களான இன்றைய இளைய தலைமுறையினர் நாசமாவதைத் தடுக்கவும் கூர்மையடைந்துவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வேகத்திலிருந்து மக்கள் மனதை பொழுதுபோக்கு என்ற பெயரில் திசை திருப்பி போராட்டத்தையும் கல்வியையும மழுங்கடித்துவரும இத்திரையரங்குகளை பொறுப்புள்ள விடுதலை ஸ்தாபனங்கள் அவதானமாக கண்காணிப்பது அவசியம்.

நம் கலாச்சாரம் அழிவதை நாம் பார்த்துக் கொண்டிருப்பது நமயினத்தை நாமே அழிப்பதற்குச் சமனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org